இவர் செய்த சாதனைகள்: பல பேட்டிகள் கொடுத்தார், புத்தகம் எழுதினார், நாடகத்தில் நடித்தார். மொத்த அறிவியல் உலகையே கட்டுக்குள் வைத்து இருந்தார்.

50 வருடங்கள் இவர் ஒரே இருக்கையில் இருந்தார். ஆனால் உலகமே இவரைச் சுற்றி வந்தது. 9 கிரகம் சூரியனை சுற்றுவது போல, ஒரு முறை அவரது வீட்டில் பெரிய விருந்து ஏற்பாடு செய்துவிட்டு எதிர்கால சந்ததிக்காக காத்திருந்தார். ஆனால் அப்போது யாரும் டைம் டிராவல் செய்து அவரை பார்க்க வரவில்லை. அப்போது அவர் இப்படி கூறினார். இப்போது என்னை யாரும் பார்க்க வரவில்லை. ஆனால் ஒருநாள் நீங்கள் எதிர்காலத்தில் இருந்து யாரையாவது பார்க்க கடந்த காலத்திற்கு செல்வீர்கள்! என்று குறிப்பிட்டார்.

இன்றளவும் உலக அறிஞர்களுக்கு சவால் விட்டுக் கொண்டு இருக்கும் பெரு வெடிப்புக் கோட்பாடு (Big Bang Theory), குவியக்கொள்கை (Quantum Theory), கருந்துக்களை கோட்பாடுகள் ஸ்டீபன் வாழ்க்கையின் சில மைல் கல்.

பெருவெடிப்புக் கோட்பாடு என்பது அண்டம் எவ்வாறு தோன்றியது என்பது பற்றி விளக்கமுயலும் ஒரு கோட்பாடு ஆகும். இதுவரை முன்வைக்கப்பட்ட ஆண்டத்தின் தோற்றம் பற்றிய கோட்பாடுகளில் பரவலாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. இதுதான் என்பது கூடுதல் சிறப்பு.

கருந்துக்களை கோட்பாடு என்பது இவற்றின் எல்லைக்குச் செல்லும், ஒளி உட்பட்ட எதுவுமே வெளியேற முடியாத அளவு வலுவான ஈர்ப்புச் சக்தியைக் கொண்டுள்ள அண்டவெளியில் ஒரு பகுதியாகும். மேற்குறிப்பிட்ட எல்லை நிகழ்வெல்லை (event horizon) எனப்படும். இந்த நிகழ்வெல்லைக்குள் இருந்து பார்க்கக் கூடிய ஒளி அலைகள் போன்ற மின்காந்த அலைகள் கூடத் தப்பிவெளியேற முடியாது. என்பதால் உள்ளே நடப்பவை எவற்றையுமே வெளியில் இருந்து அறிந்து கொள்ள முடியாது. இதனாலேயே இதனைக் கருங்குழி என்கின்றனர்.

இது மட்டுமன்றி கடவுள் மறுப்பு கோட்பாடு, The origins of Universe உள்ளிட்ட பல முக்கிய கோட்பாடுகளையும் ஸ்டீபன் வகுத்துக் கொடுத்துள்ளார்.

ஆராய்ச்சித் துறையில் அவர் ஆற்றிய பணிகளுக்காக வாழ்நாள் சாதனையாளர் விருது மற்றும் 12 கௌரவ டாக்டர் பட்டங்களை பெற்றுள்ளார் ஸ்டீபன்.

ச. ரிஷிகேசன்
தரம் – 11

# இலங்கைக் கல்வியல் நிகழ்வுகளின் கண்ணோட்டம்
# அண்மைக்காலக் கல்வி பொது விடயங்கள் தொடர்பானவை

**01. இலங்கையின் கல்வி அமைச்சு:**

கல்வி அமைச்சு : இசுறுபாய (அமைந்துள்ள இடம்)

கல்வி அமைச்சர்: அகிலவிராஜ் காரியவசம்

கல்வி வெளியீட்டுத் திணைக்கள நாயகம் : ஐ.எம். கே. டி. இலங்கசிங்க

**இலங்கையில் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தொகை :**

சுமார் 41 இலட்சம்

கல்வி மாவட்டங்கள் - 31

கல்வி வலயங்கள் - 96 (யாழ்ப்பாணத்தில் 12 வலயங்கள்)

**02. கல்வி வெளியீட்டுத் திணைக்களம்:**

பாடநூல்களை அச்சிட்டு பாடசாலைகளுக்கு முறையாக விநியோகிப்பது கல்வி வெளியீட்டுத் திணைக்களத்தின் பிரதான கடமையாகும். இலவச பாடப் புத்தகம் விநியோகம் 1980 முதல் நடைபெற்று வருகின்றது. இதற்காக கிட்டத்தட்ட 240 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது. சுமார் 41 இலட்சம் மாணவர்களுக்கு மூன்று மொழிகளாலும் 3 கோடி 75 இலட்சம் நூல்கள் அச்சிட்டு வழங்கப்படுகிறது. அவை 437 வகைகளாகும்.

**03. இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்**

இலங்கை பரீட்சைத் திணைக்களம் ஒரு வருடத்தில் 350 பரீட்சைகளை நடாத்தி வருகின்றது. இதில் மிகப் பெரிய தொகை பரீட்சாத்திகளைக் கொண்ட பரீட்சை க.பொ.த சாதாரண தரப் பரீட்சையாகும். 2வது இடத்தில் க.பொ.த உயர்தரப் பரீட்சை உள்ளது. அத்துடன் 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை, அமைச்சுக்கள், திணைக்களங்கள், வங்கிகள் போன்றவற்றிற்கான பரீட்சைகள், கல்வியியற் கல்லூரிகளின் இறுதிப் பரீட்சை, வெளிநாட்டுப் பரீட்சைகள், அரச சேவைகளில் பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளும் போட்டிப் பரீட்சைகள் அரச சேவைகளில் தரம் உயர்த்தல் பரீட்சைகள் உட்பட பல்வேறு பரீட்சைகள் நடைபெற்று வருகின்றன. இவ்வாறு பரீட்சைகளை நடாத்தி நவீன தொழில்நுட்பங்களைக் கையாண்டு குறுகிய காலத்தில் பெறுபேறுகளை வெளியிடுகின்றது.

**04. தேசிய கல்வி நிறுவகம் (NIE)**

1985இல் நிறுவப்பட்டதாகும். கல்வி அபிவிருத்தி, பாடவிதானம் கல்வி சம்பந்தமான ஆய்வுகள், ஆசிரியர் பயிற்சி போன்ற அம்சங்களை அபிவிருத்தி செய்ய உருவாக்கப்பட்ட அமைப்பாகும்.

# தேசிய மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள்



கோ. சானுஜா
(கராத்தே)



டெ. தனுசிகா
(கராத்தே)



ம. அனிஸ்ரன்
(இந்து கலாசார அமைச்சினால் நடாத்தப்பட்ட
ஆக்கத்திறன் விருது - 2017. சித்திரம் வரைதல்
3ஆம் இடம்)



ஜெ. கீர்த்தனா
(கராத்தே)

க.பொ.த. சாதாரண தரப் பரீட்சையில்
சிறந்த பெறுபேறு - 2017



க. சர்மிதா
(7A,B,S)

தமிழ் இலக்கண வினாவிடை (தனி)
மாகாண மட்டம் முதலாம் இடம் - 2018



சு. மயூரி
(A/L 2019)

அரச பணியில் நியமனம் பெற்றோர் - 2018



செல்வி செ. சுமதி
(முகாமைத்துவ உதவியாளர் - கல்வி அமைச்சு)



செல்வி ஞா. றொசாணி
( ஆசிரியை. தி/ பாரதி தமிழ் வித்தியாலயம்)

பல்கலைக் கழகங்களில் பட்டம் பெற்ற எமது சிறார்களுக்கு வாழ்த்துக்கள்...

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**செல்வி வி. கஜிதா** (கலைமாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**செல்வி வி. விஜயதர்சினி** (கலைமாணி)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



**செல்வி ந. சங்கீதா** (கலைமாணி)

## பல்கலைக்கழகங்கள் மற்றும்
## தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் எமது சிறார்கள்


ரா. ரஜீவனா (2011)


வ. டனுசியா (2011)


சி.ஜசிந்தா (2012)


செ.பாமதி (2012)


ந. லேமிதன் (2012)


வி. குசலா (2012)


கி. மனோரதி (2012)


நா. சிந்துஜா (2013)


ரா. ரஜீந்தினி (2013)


பா. கஜீபன் (2013)


ர. கவீனா (2013)


கு. விபுஷா (2013)

## பல்கலைக்கழகங்கள் மற்றும்
## தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கல்வி பயிலும் எமது சிறார்கள்



த. ஜனோசன் (2013)



இ. நித்திகா (2013)



தி. இளங்குமரன் (2014)



தி. குறிஞ்சி (2015)



சி. தயந்தா (2015)



ஸ்ரீ. கோகிலமதி (2015)



செ. ராஜினி (2015)



ரா. அறிவழகி (2015)



செ. யஞ்சிகா (2016)



கி. சிவரஞ்சினி (2016)



நா. பர்மினி (2016)

எஸ். ஆர் கனகநாயகம் சிறுவர் பூங்கா








நெனசல ( அறிவகம் )



சித்திரைப் புத்தாண்டு கைவிஷேடம் - 2018





### இலங்கையில் பாடசாலைகள்

தேசிய பாடசாலைகள் 329 உள்ளன. இலங்கையில் தேசிய பாடசாலைகளுக்கு மாணவர்களை அனுமதிப்பதில் கடும் போட்டி நிலவுகின்றது. இதில் 156 பாடசாலைகளில் மாணவர்களைச் சேர்ப்பதில் கடும் போட்டி நிலவுகின்றது. அதிலும் கொழும்பு மாவட்டத்தில் 12 பாடசாலைகளில் மிகக்கடும் போட்டி நிலவுகின்றது. கண்டி, காலி உட்பட நகர பாடசாலைகளிலும் போட்டி நிலவுகின்றது. இதற்கு காரணம் இப்பாடசாலைகளில் சகல வளங்களும் இருப்பதாகும். மொழிவாரியாக இலங்கையில் காணப்படும் தேசிய பாடசாலைகள் வருமாறு,

சிங்கள மொழித் தேசிய பாடசாலைகள் - 258
தமிழ் பாடசாலைகள் - 29
முஸ்லீம் பாடசாலைகள் - 42
மொத்த அரச பாடசாலைகள் - 9662
தனியார் பாடசாலைகள் - 97
சர்வதேச பாடசாலைகள் - 500

### இலங்கை பல்கலைக்கழகங்கள்

இலங்கையில் 15 தேசிய பல்கலைக்கழகங்கள் இயங்குகின்றன. அதில் “பேரதெனியா, கொழும்பு, காலி, ஜெயவர்த்தனபுர, மொறட்டுவ” எனும் பல்கலைக்கழகங்கள் சர்வதேச தரத்தைப் பெற்றவை. 2020ம் ஆண்டளவில் இலங்கையில் 10 வெளிநாட்டு பல்கலைக்கழகங்கள் இயங்குமென தீர்மானிக்கப்பட்டன.

பட்டப்பின் படிப்பு கல்வி டிப்ளோமா சான்றிதழ் வழங்கும் நிறுவனங்கள் :-

1. கொழும்பு பல்கலைக்கழகம்
2. யாழ்ப்பாண பல்கலைக்கழகம்
3. இலங்கை திறந்த பல்கலைக்கழகம்
4. தேசிய கல்வி நிறுவகம்

### பல்கலைக்கழகத் தெரிவு முறை

#### 1. 'Z' புள்ளி தீர்மானம் (க.பொ.த உயர்தரம்) :-

Z புள்ளி முறை ஏற்பட அடிப்படையாக அமைந்த பின்னணியை நோக்கினால் அதன் அம்சங்களை தெளியலாம். இலவசக் கல்வியைத் தாய்மொழி மூலம் வழங்கத் தொடங்கியதன் பின்னர் பெரும் தொகையான மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் கல்வி பெறும் வாய்ப்பைப் பெற்றனர். உயர் வகுப்பாரின் சொத்தாக இருந்த பல்கலைக்கழகக் கல்வி சாதாரண மக்களின் பிள்ளைகளும் அனுபவிக்கக் கூடிய நிலை உருவானது.

1960 களில் இருந்து சிறு தொகை மாணவர்கள் தாய் மொழிமூலம் பல்கலைக்கழகங்களுக்கு அனுமதிக்கப்பட்டனர். அக்காலத்தில் பல்கலைக்கழக புகுமுக பரீட்சை H. S. C எனவும் U.E எனவும் அழைக்கப்பட்டது. பல்கலைக்கழகத்திற்கு மாணவர்கள் க.பொ.த உயர்தரப் பரீட்சையில் 4 பாடங்களால் பெற்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டனர். பின்னர் 3 பாடங்களில் பெற்ற மொத்த புள்ளிகள் அடிப்படையில் அனுமதிக்கப்பட்டனர். இதில் பல குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டமையால் மாற்றங்கள் செய்ய வேண்டி ஏற்பட்டது.

இதனால் 2001 முதல் "Z புள்ளி" முறை அறிமுகம் செய்யப்பட்டது. க.பொ.த உயர்தரப் பரீட்சையில் பெற்ற மொத்த புள்ளிகளினடிப்படையில் பல்கலைக்கழக அனுமதி நியாயமற்றது" என்ற கொள்கையினடிப்படையில் எடுக்கப்பட்ட முடிவு தான் "Z புள்ளி" முறையாகும். இது பொருத்தமானது என புள்ளியில் வல்லுனர்கள் முடிவு செய்தனர். இதிலும் குறைபாடுகள் இருப்பதாகச் சுட்டிக் காட்டப்பட்டமையால் மாற்றங்கள் செய்யப்பட்டன. Z புள்ளியை கணிப்பிடுவதற்கு பின்வரும் சமன்பாடு பயன்படுத்தப்படுகின்றது.

$$Z = \frac{X - X}{SD}$$

X - மாணவர்களின் தனிப்பட்ட முறையில் பெற்ற புள்ளி

X - குறித்த பாடத்திற்குத் தோற்றியோர் பெற்ற மொத்த புள்ளி

SD - நியம விலகல்

பரீட்சையில் ஒரு மாணவன் பெற்ற மூலப் புள்ளியிலிருந்து தொகுதி ஒரு மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் சராசரி அல்லது இடைப்பெறுமானத்தைக் கழித்து அத்தொகுதி மாணவர்கள் பெற்ற புள்ளிகளின் அடிப்படையில் கணிப்பிடப்பட்ட நியம விலகலால் பிரிக்கும்போது கிடைக்கு பெறுமானம் "Z புள்ளி " ஆகும். நியம விலகல் அடிப்படையில் ஒரு புள்ளி கூடுதலாக அல்லது குறைவாக இருக்கின்றது என்பதை இதன் மூலம் விளங்கிக் கொள்ளலாம்.

99% Z புள்ளிகள் -3 இலிருந்து +3 க்கிடையில் தசம தானங்களுடன் இருக்கும். க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாணவர்கள் மூன்று பாடங்களில் பெற்ற "Z புள்ளிகளின்" அடிப்படையில் மாணவர்கள் அனுமதிக்கப்படுவார்கள்.

த. வேணுஜா
க.பொ.த உயர்தரம் 2019

## விடுகதை

01. பச்சை வீட்டுக்கு சிவப்பு வாசல் அது என்ன?

கிளி

02. நாலு கால் உண்டு ஆனால் நடக்கத் தெரியாது?

கதிரை

03. தன்னுடன் சேருபவனை தன்னைப்போலவே மாற்றுவான் அவன் யார்?

பால்

04. பல்லிருக்கு ஆனால் கடிக்கத் தெரியாது அது என்ன?

சீப்பு

05. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் அவன் யார்?

காற்று

06. தலையைச் சீவினால் தாளிலே மேய்வான் அவன் யார்?

பென்சில்

07. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டிருப்பான் அவன் யார்?

பூமி

த. ஜித்திகா

## லக்சிகாவின் கவிதைகள்

### தம்பி

உறவு சொந்தம் என்று
எல்லாம் இருந்தும்
தம்பி என்னும் சொந்தத்தை
பிரிக்க ஒரு சொந்தம்
இருக்கிறது அதனை நினைத்து
வருந்துகின்றேன்
இந்த ஜெனமத்தில் தான்
தம்பி நீயும் நானும்
சேரவில்லை - அடுத்த
பிறவி ஒன்று இருந்தால்
சேருவோம் தம்பி.

### என் அம்மா

கருவில் சுமந்த என் அன்னை.....!
கருவிழியாய் காத்தவள் என்
அன்னை...!
கைப்பிடித்து என் மழலைச் சொல்
கேட்டு
யார் கண்ணும் படாமல் பார்த்தவள்
என் அன்னை....!
அம்மழையில் நனைந்தவள்
என் அன்னை...!
அவளே என் அன்னை....!

## இரு கவிதைகள்

### றோஜாப்பூ

முள்ளு வேலிக்குள் இருந்தது
முகத்தைக் காட்டும் றோஜாவே
கொள்ளை அழகில் உன்னில் மயங்கி
கொண்டை மீது வைத்தனர் விருப்பாய்
சிவப்பு வெள்ளை றோஜாவே
சிலித்துப் பூக்கும் மலரே
காதல் ஜோடிகளை
கனி உடன் சேர்த்தாயே
சிறுவர் மனதில் இடம் பிடித்து
சிரித்து விளையாட வைத்து
பெண்களை கவர வைத்து
கண்களை சிமிட்டாய் நீயே...!

*சௌ. நிதர்சன்*

## அம்மா..!

ஈரைந்து மாதங்கள் ஈன்றெடுத்த ஈழத்தாயே
துன்பங்கள் பலசுமந்து துயரங்கள் அனுபவித்து
உதிரத்தை உருக்கி உயிர்த்த புனிதத் தெய்வம்
தாலாட்டி சீராட்டி தவமிருந்து கண்விழித்து
கொஞ்சிக் குலாவி கொள்ளை அன்பொழுக
நிலாக்கதைகள் சொல்லி நித்தம் சோறூட்டி
கானங்கள் பாடி கண்ணுறங்க வைத்து
நீ உறக்கமின்றி நிலைபெறச் செய்தாயே
அன்னையே.....!

*சௌ. நிதர்சன்*

## அன்புள்ள அப்பா

அன்புள்ள அப்பாவே, எம் அம்மா, இந்த உலகத்தை விட்டு போனதன் பின்னர் அப்பா நீரே அம்மாவும் அப்பாவும். எல்லாமே நீங்கள் தான் அப்பா. வார்த்தைகளால் அறிவு தந்து மௌனங்களால் சிரிக்க வைத்த உயிரே நீங்கள் தான் அப்பா. உங்கள் கண்களிலிருந்து விழும் கண்ணீர்த் துளியின் மூலம் என்னை தவிக்கவிடலாமா அப்பா? நான் வணங்கும் கடவுளே நீங்கள் தான் அப்பா. உங்கள் அன்புக் குழந்தையின் வயித்துப் பசியை நீக்கியதும் நீங்கள் தான் அப்பா. அப்பா என் மனதில் எழும் துன்பத்தை எல்லாம் உங்கள் அன்பாலே போக்கிவிட்டீர்கள் அப்பா. கஷ்டத்தின் மத்தியிலும் எமக்கு வழிகாட்டி விடும் எனது அப்பா என்றென்றும் வாழ்க வாழ்க.

உ. உதயப்பிரியா
தரம் – 09

## அம்மா

*முன்னூறு நாள் சுமந்தாள் கண்ணீரால் போராடி*
*மரணத்தைவென்று மகவாய் ஈன்றாள்*
*உதிரமதைப் பாலாய் உண்ணக் கொடுத்தாள்*
*உண்ண மறந்தாள் தன்நலம் மறந்தாள்*
*என் நலனுக்காய் அறிவில் சிறந்திட*
*அறிவுரைகள் தந்தாள் இன்பம் மறந்தாள்*
*என்இன்ப வாழ்வுக்காய் என் உணர்வுக்காய்*
*அற்றதுணை தந்தாள் நிழலாய் தொடர்ந்த*
*என் இன்ப உறவு என்னை விட்டு மறந்தாலும்*
*என் இதயம் உன்னை மறக்காது அம்மா...*

உ. யதுர்சிகா
தரம் -10

## சுனாமி

வாழ வேண்டிய வயசுகளை
எல்லாம் வாரி எடுத்தாயே
சாக வேண்டியவர்களை எல்லாம்
பக்குவமாய் காப்பாற்றிவைத்திருக்கின்றாயே
நல்லவர்கள் யார் என்று தெரியாமல்
போனதால் நாடே நரகமாகிவிட்டது
இனி யார்தான் இருந்து என்ன பயன்
இருக்க வேண்டியவர்கள் எல்லாம்இல்லாமல்
போனதால் இருண்டு போனதே
எம் உறவுகளின் வாழ்வு.

**நண்பன்**

நண்பனுக்காய் ஓர் காவியம்
நான் எழுதும் உயிரோவியம்
நான் பெற்ற உறவுகளில்
நண்பனாய் நீ கிடைத்து விட்டாய்.

## அம்மா

என் அன்புத்தாயே!
உன்னைக் காணாமல் நான் தவிக்கும்
தவிப்பு எனக்கு மட்டுமே தெரியும்

நான் உறங்கும்போது நீ என்னை
தூக்கத்தில் இருந்து தட்டி எழுப்புகிறாய்
நீ தினமும் விடும் ஒரு துளிக் கண்ணீர்
என் மனதில் குளத்துக்கு அணைகட்டுகிறது

உனது மௌன வாசலில் எனது
அன்புப் பாசம் நிறைந்திருக்கும் - என்
மனதில் நீ படும் கஸ்ரம் தெரிகிறது
உனக்காக நான் என் உயிர் பிரிய
சம்மதிக்கின்றேன் அம்மா!.

பத்து மாதம் என்னை கருவில் சுமந்து
பிரசவ வலியில் துடித்து தன்
கண்ணீரை வடித்து - என்னை
ஈன்றெடுத்த அம்மா!

சிறுவயதில் பாலூட்டி சோறூட்டி
நிலாக்கதை சொல்லி என் கஸ்ரத்தை
போக்கி நீ உண்ணாமல் என் பசி போக்கி
என்னை தவம் இருந்து பெற்றெடுத்தவள்
என் அம்மா!

நீ என்னை இவ்வளவு காலமும் வளர்த்து
விட்டதற்கு உனக்கு கோடி புண்ணியம்
என் செல்ல அம்மா!

தே. அனிஸ்ரா
தரம் - 11

# பெற்றோர் சொல் கேளீர்

புதுத்தெரு என்றொரு கிராமம் சின்னச்சாமி ஆடு மேய்ப்பவர். வழக்கமாக ஒரு புல்வெளியில் ஆடுகள் மேய்ந்து கொண்டிருந்தன. சின்னச்சாமிக்கு புல்லாங்குழல் வாசிப்பதென்றால் அவ்வளவு பிரியம். ஆடுகள் மேய்த்தவாறு மரத்தடியில் உட்கார்ந்து கண்மூடி புல்லாங்குழல் வாசிக்க ஆரம்பித்தான். அந்த புல்வெளியைச் சுற்றி முள்வேலி போடப்பட்டிருந்தது.

வேலியின் அருகே ஆட்டுக்குட்டி மேய்ந்து கொண்டிருந்தது. வேலியின் மறுபுறம் ஓநாய் ஒன்று வேட்டைக்கு காத்திருந்தது ஓநாய் ஆட்டுக்குட்டியைப் பார்த்ததும் எதையோ பார்ப்பது போல பாசாங்கு செய்தது அதைப் பார்த்த ஆட்டுக்குட்டி சற்று ஆச்சரியமாக பார்த்தது ஓநாயை முதல் முறையாக பார்த்ததினால் அதன் நோக்கம் ஆட்டுக் குட்டிக்கு தெரியாமல் "உனக்கு என்ன வேண்டும்?" என்று பாசமாக கேட்டது.

ஓநாயோ "நண்பா நண்பா ... நீ பார்க்க ரொம்ப அழகா இருக்கீங்க இங்கே இளம்புல் என்றால் எனக்கு ரொம்ப பிரியம் அதைத் தின்று தண்ணீர் குடித்தால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா?! உங்களுக்கெல்லாம் அந்த யோகம் கிடைத்திருக்கிறது. எனக்கு அது கிடைக்கவில்லை...." என்றது பாவமாக. ஓ ...! அப்படியா! நீ புல் சாப்பிடுவாயா? நீ மாமிசத்தைத்தான் சாப்பிடுவாய் என்று என் அம்மாவும் அப்பாவும் சொன்னார்களே?" என்று ஆச்சரியத்துடன் கேட்டது ஆட்டுக் குட்டி. "சேச்சே ..... அதெல்லாம் சுத்தப் பொய்!" என்றது ஓநாய் ஓ அப்படியா "சரி அங்கேயே இருங்கள் நான் வெளியே வந்து மலையின் அந்த பக்கம் இளம்புல் இருக்குமிடத்தைக் காட்டுகிறேன். நாம் இரண்டு பேரும் போய் ஜாலியா அதை சாப்பிட்டுவிட்டு நண்பர்களாகச் சுற்றலாம்!" என்று சொல்லிவிட்டு ஆட்டுக்குட்டி வேலி இடுக்கின் வழியாக நுழைந்து ஓநாயின் பக்கம் போயிற்று ஓநாயின் திட்டம் தெரியாமலும் ஆடு சிநேகத்துடன் சென்றதும் அது சட்டென அதன் காலை பிடித்து கொண்டது ஆடு சத்தமாக கத்த தொடங்கியது.

சின்னசாமியும், தாய் ஆடும் சத்தம் வந்த இடத்தை நோக்கி ஓடினர். ஓநாய் அதற்குள் ஆட்டுக் குட்டியின் கழுத்தை பிடிக்கும் நேரத்தில் அவர்கள் ஓநாயை அடித்து விரட்டி விட்டார்கள் அந்த ஆட்டுக்குட்டிக்குத் தானாகத் தெரியவில்லை. அனுபவம் நிறைந்த அம்மா, அப்பா பேச்சை கேட்டிருந்தால் இந்த மாதிரி ஆபத்தில் மாட்டிக் கொள்ளாமல் இருந்திருக்கலாம் மதிப்பு வாய்ந்த தன் உயிரைக் காப்பாற்றிய சின்னசாமிக்கும் பெற்றோர்க்கும் நன்றியோடு நடந்து கொண்டது அந்த ஆட்டுக்குட்டி.

தனுசியா செல்வராசா
தரம் : 10

## நட்பு

உலகினிலே மிகவும் புனிதமானது நட்பே ஆகும். நட்பு சந்தோசத்தைப் பங்கிடுவதல்ல. துக்கத்திலும் கை கொடுப்பது. எந்தத் துன்பத் தின் போது தோள் கொடுப்பது நட்பாகும். மானிடா உலகில் எதை இழந்தாலும் நட்பை இழக்காதே. நட்பைவிட சிறந்தது ஏதேனும் உண்டா? நட்பு இல்லாவிட்டால் ஒரு சிறந்த நட்பை நாடுங்கள்.

S. நிகேதன்
தரம் – 10

## மாணவர்க்கு

உங்களின் குறிக்கோளில் மட்டுமே உயர்ந்த ஆசையும், முக்கிய கவனமும் இருக்க வேண்டும். ஊக்கமும் முயற்சியும் வாழ்வில் முக்கியம். ஒவ்வொரு நாளும் நல்லதை நினைத்து நல்லதையே செய்ய வேண்டும் இறையருளால் நமக்கு நல்ல வழி கிடைக்கும். படித்து உழைத்து பல பட்டங்கள் பெற்று சிறந்த நம்பிக்கையில் செயல்பட வேண்டும். அதுவே உங்களை உயர்ந்தவர்களாக்கும்.

இ. இந்துஜன்
தரம் – 10

# அறுபத்து மூன்று நாயன்மார்கள்

| நாயன்மார்கள் | | ஊர் | முத்தியடைந்த தினம் |
|---|---|---|---|
| 01. | அதிபத்தர் | நாகபட்டினம் | ஆவணி ஆயிலியம் |
| 02. | அப்பூதியடிகள் | திங்களூர் | தைச் சதயம் |
| 03. | அமர்நீதியார் | பழையாறை | ஆனிப் பூரம் |
| 04. | அரிவாட்டாயர் | கணமங்கலம் | தைத் திருவாதிரை |
| 05. | ஆனாயர் | மங்கலவூர் | கார்த்திகை அத்தம் |
| 06. | இசைஞானியார் | திருநாவலூர் | சித்திரைச் சித்திரை |
| 07. | இடங்கழியார் | கொடும்பாளூர் | ஐப்பசிக் கார்த்திகை |
| 08. | இயற்பகையார் | காவிரிப்பூம்பட்டினம் | மார்கழி உத்தரம் |
| 09. | இளையான்குடிமாறன் | இளையான்குடி | ஆவணி மகம் |
| 10. | உருத்திர பசுபதியார் | திருத்தலையூர் | புரட்டாதி அச்சுவினி |
| 11. | ஏறிபத்தர் | கருவூர் | மாசி அத்தம் |
| 12. | ஏயர்கோன் கலிக்காமர் | திருப்பெருமங்கமலம் | ஆனி ரேவதி |
| 13. | ஏனாதி நாதர் | எயினனூர் | புரட்டாதி உத்தராடம் |
| 14. | ஐயடிகள் காடவர்கோன் | காஞ்சிபுரம் | ஐப்பசி மூலம் |
| 15. | கணநாதர் | சீர்காழி | பங்குனித் திருவாதிரை |
| 16. | கணம்புல்லர் | இருக்குவேளூர் | கார்த்திகைக் கார்த்திகை |
| 17. | கண்ணப்பர் | உடுப்பூர் | தை மிருகசீரிடம் |
| 18. | கலிக்கம்பர் | திருப்பெண்ணாகடம் | தை ரேவதி |
| 19. | கலியர் | திருவொற்றியூர் | ஆடிக் கேட்டை |
| 20. | கழறிற்றறிவார் | கொடும்பாளூர் | ஆடிச் சுவாதி |
| 21. | கழற்சிங்கர் | பல்வநாடு | வைகாசிப் பரணி |
| 22. | காரியார் | திருக்கடவூர் | மாசிப் பூராடம் |
| 23. | காரைக்காலம்மையார் | காரைக்கால் | பங்குனிச் சுவாதி |
| 24. | குங்குலியகலயர் | திருக்கடவூர் | ஆவணி மூலம் |
| 25. | குலச்சிறையார் | மணமேற்குடி | ஆவணி அனுஷம் |
| 26. | கூற்றுவர் | காந்தை | ஆடித் திருவாதிரை |
| 27. | கோச்செங்கட் சோழர் | திருவானைக்கா | மாசிச் சதயம் |
| 28. | கோட்புலியார் | நாட்டியத்தான்குடி | ஆடிக் கேட்டை |
| 29. | சடையனார் | திருநாவலூர் | மார்கழித் திருவாதிரை |
| 30. | சண்டேஸ்வரர் | திருசேய்ருலூர் | தை உத்தரம் |
| 31. | சத்தியார் | வரிஞ்சியூர் | ஐப்பசிப் பூசம் |
| 32. | சாக்கியார் | திருச்சங்கமங்கை | மார்கழிப் பூராடம் |
| 33. | சிறப்புலியார் | திருஆக்கூர் | கார்த்திகைப் பூராடம் |
| 34. | சிறுத்தொண்டர் | திருச்செங்காட்டன்குடி | சித்திரைப் பரணி |
| 35. | சுந்தர் | திருநாவலூர் | ஆடிச் சுவாதி |
| 36. | செருத்துணையார் | தஞ்சாவூர் | ஆவணிப் பூசம் |
| 37. | சோமாசிமாறர் | திருஅம்பர் | வைகாசி ஆயிலியம் |
| 38. | தண்டியடிகள் | திருவாரூர் | பங்குனிச் சதயம் |

| | | | |
|---|---|---|---|
| 39. | திருக்குறிப்புத்தொண்டர் | காஞ்சிபுரம் | சித்திரைச் சுவாதி |
| 40. | திருஞானசம்பந்தர் | சீர்காழி | வைகாசி மூலம் |
| 41. | திருநாவுக்கரசர் | திருவாரூர் | சித்திரைச் சதயம் |
| 42. | திருநாளைப்போவர் | ஆதனூர் | புரட்டாதி ரோகிணி |
| 43. | திருநீலகண்டர் | சிதம்பரம் | தை விசாகம் |
| 44. | திருநீலகண்டயாழ்ப்பாணர் | எருக்கத்தம்புலியூர் | வைகாசி மூலம் |
| 45. | திருநீலநக்கர் | சாத்தமங்கை | வைகாசி மூலம் |
| 46. | திருமூலர் | சாந்தனூர் | ஐப்பசி அச்சுவினி |
| 47. | நமிநந்தியடிகள் | ஏமப்பேரூர் | வைகாசிப்பூசம் |
| 48. | நரமிங்கமுனையரையர் | திருமுனைப்பாடி | புரட்டாதிச் சதயம் |
| 49. | நின்றசீர்நெடுமாறர் | மதுரை | ஐப்பசிப் பரணி |
| 50. | நேசர் | காம்பீலி | பங்குனி ரோகிணி |
| 51. | புகழ்ச்சோழர் | உறையூர் | ஆடிக் கார்த்திகை |
| 52. | புகழ்த்துணையார் | செருவிலிபுத்தூர் | ஆவணி ஆயிலியம் |
| 53. | பூசலார் | திருநின்றவூர் | ஐப்பசி அனுஷம் |
| 54. | பெருமிழலைக்குறும்பர் | பெருமிழலை | ஆடிச் சித்திரை |
| 55. | மங்கையர்க்கு அரசியார் | மதுரை | சித்திரை ரோகிணி |
| 56. | மானக்கஞ்சாறர் | கஞ்சனூர் | மார்கழிச் சுவாதி |
| 57. | முருகர் | திருப்புகலூர் | வைகாசி மூலம் |
| 58. | முனையடுவார் | திருநீடூர் | பங்குனிப் பூசம் |
| 59. | மூர்க்கர் | திருவேற்காடு | கார்த்திகை மூலம் |
| 60. | மூர்த்தி | மதுரை | ஆடிக் கார்த்திகை |
| 61. | மெய்ப்பொருளார் | திருக்கோவலூர் | கார்த்திகை உத்தரம் |
| 62. | வாயிலார் | திருமயிலாப்பூர் | மார்கழி ரேவதி |
| 63. | விறன்மிண்டர் | செங்குன்றூர் | சித்திரைத் திருவாதிரை |

ஜெ. கீர்த்தனா
க.பொ.த உயர்தரம் 2019

## தொலைக்காட்சியும் பிள்ளைகளும்

தொலைக்காட்சிப்பெட்டி முன் சிறுவர்கள் உட்கார்ந்து பார்க்கும் விதம் குறித்து பெற்றோர் கவனம் செலுத்த வேண்டும். பிள்ளைகள் பெரும்பாலும் ஆசனத்தில் படுத்துக் கிடந்து அல்லது நிலத்தில் இருந்தவாறு தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பார்கள். தவறான முறையில் இருந்து பிள்ளைகள் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதனால் அவர்களது உடல் இயக்கங்களில் பாதிப்பு எற்பட வாய்ப்புக்கள் ஏற்படுகின்றன. தொலைக்காட்சிப் பெட்டிக்கு நான்கு அல்லது ஐந்து அடி தூரத்துக்கு அப்பால் இருந்து பிள்ளைகள் பார்க்கலாம். 18 அடிக்கு அப்பால் இருக்கக்கூடாது. கண் பார்வை மட்டத்துக்கு அளவாக அல்லது கீழாக திரை இருக்கலாம். கண்ணாடி அணியும் பிள்ளை திரைக்கு முன் இருக்கும் போது கட்டாயம் கண்ணாடி அணிந்திருக்க வேண்டும். பூரணமான இருளில் இருந்து அப்பிள்ளை திரையைப் பார்க்கக் கூடாது. தொலைக்காட்சி பார்க்கும் போது அறையில் லேசான வெளிச்சம் இருக்க வேண்டும்.

ம. அனுசியன்
தரம் – 11

## கேள்வி பதில்

உலகின் உயரமான மலைச் சிகரம் எது?
எவரெஸ்ட்

எவரெஸ்ட் அமைந்துள்ள வளைகுடாப் பகுதி எது?
இந்திய வளைகுடா

இந்திய விடுதலைப் போராட்டத்திற்கு பலம் சேர்த்த கவிஞர் யார்?
ரவீந்திரநாத்தாகூர்

ரவீந்திரநாத்தாகூர் கவிதைப் படைப்பு எது?
கீதாஞ்சலி

கீதாஞ்சலிக்குக் கிடைத்த விருது என்ன?
நோபல் பரிசு

நோபல் பரிசை உருவாக்கிய அல்பிரட் நெபெல் எந்த நாட்டவர்?
ஸ்வீடன் நாட்டைச் சேர்ந்தவர்

ஸ்வீடன் தலைநகர் எது?
ஸ்டாக்ஹோம்

ஸ்டாக்ஹோம் உடன்படிக்கை எதற்கான உடன்படிக்கை ஆகும்?
ஐக்கிய நாடுகளின் மனித சுற்றாடல் பற்றிய உடன்படிக்கை

ஐக்கிய நாடுகள் சபையின் தலைமையகம் எங்கு அமைந்துள்ளது?
அமெரிக்கா

அமெரிக்காப் புரட்சி ஏற்படுவதற்கான காரணம் யாது?
பொஸ்டன் தேநீர் விருந்து

க. நிந்துசன்
தரம் – 10

## காத்திருக்கிறேன் அம்மா!

கல்வியில் தொடங்கிய பயணத்தில்
கருத்தரித்த அந்தத் தருணத்தில்
வாந்தி தரும் மயக்கத்தில் அம்மா
நீ உன் வயிற்றினுள் கருவறையென்ற
அந்த அரிசாயனத்திலிருத்தி
உனக்கு நிகர் சரிசமமாகச் சரியாசனம் தந்தே
உன் இரத்தத்தினாலும் மூச்சுக் காற்றினாலும்
சிப்பிக்குள் இந்த முத்தை வளர்க்கிறாய்.

நான் கருவறைக்குள்ளிருக்கும் அநுபவத்தை
பரபரப்போடும் பயத்தோடும்
அடிவயிற்றைத் தொட்டுப் பார்க்கும்
அந்தப் பரவசம் எனக்கு புரிகிறது தாயே..!

உயிரோடு கலந்த உதிரத்தின் உறவே
தங்கத் தமிழதை தரப்போகும் தாயே
உன் அன்பை உணர்கிறேன்
பத்து மாதங்கள் உள்ளிருந்து
என் பிஞ்சுக் கால்கள் தரப்போகும் உதையைத்
தந்தையின் கரம் பிடித்து
தடவிக் காட்டப்போகும் உணர்வை
எண்ணிப் பார்க்கிறேன்
உள்ளம் கனிகிறது தாயே!

இந்தச் சிசுவின் நலனுக்காக
இன்று உன் உதிரத்தால் வாழவைத்த
கருவறைக்குள் வைத்து தாலாட்டுகிறாய்
நாளை உன் வீட்டுச் சுவர்களில்
என் கிறுக்கல்களை
பார்த்து ரசிப்பாயா? கோபம் கொள்வாயா?
தந்தையுடன் துள்ளி விளையாடி
பள்ளி செல்லும் அழகை
வாசல்வரை வந்து நின்று
வழியனுப்பி வைத்து ரசிப்பாயா? அம்மா!
தாயே உன் முகம் பார்க்கத் துடித்து
உன் உள்ளங்கைகளின் ஸ்பரிசத்திற்காக
ஏங்கித் தவம் கிடக்கிறேன் அம்மா!

யாழினி பிரபாகரன்
க.பொ.த உயர்தரம் கலை (2018)

## இந்துக் கலாசார அலுவல்கள் திணைகளத்தால் வழங்கப்பட்ட

## தேசிய ரீதியிலான விருதுகள்.







அலுவலகப் பணியாளர்கள்



அலுவலக சிற்றூழியர்கள்



சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையப் பணியாளர்கள்



கருணை இல்ல அபிவிருத்தி நிலையப் பணியாளர்கள்



# அறிவுப் பொக்கிசங்கள்

01. உலகிலேயே தேசியக்கொடி இல்லாத நாடு எது?
மாசிடோனியா

02. கீரைவகைகளின் தாயகம் எது?
இந்தியா

03. பூமியின் புவியீர்ப்பு விசையிலிருந்து விடுபட எவ்வளவு வேகத்தில் செல்ல வேண்டும்?
40, 000km

04. உலகின் மிகப்பெரிய எண்ணெச்சுரங்கம் எது?
காவர் (சவுதிஅரேபியா)

05. பாம்புகள் இல்லாத தீவு எது?
ஹவாய்த் தீவு

06. கறுப்பு தண்ணீர் காய்ச்சல் என்றழைக்கப்படும் நோய் எது?
மலேரியா

07. மரங்களில் சிற்பம் செதுக்கும் கலைக்கு ஆங்கிலத்தில் என்ன பெயர்?
ஸைலோ கிராமி

08. அல்லிப் பூக்களின் தாயகம் எது?
கனடா

09. மாறுகுரல் உடைய ஒரே பறவை எது?
குயில்

10. மனித மூளையில் எத்தனை நரம்புகள் குறுக்கு, நெடுக்காக ஓடுகின்றன?
1200கோடி நரம்புகள்

11. தன்னையும் மண்ணையும் வளப்படுத்தும் தாவரம் எது?
உழுந்து

12. ஒரு அவுன்ஸ் தங்கத்தை எவ்வளவு நீளமாக நீட்டலாம்?
43 மைல் நீளம்

13. சூரியக் கதிர்கள் கடலுக்குள் எவ்வளவு தூரம் வரை செல்லும்?
350 அடிதூரம்

14. ஒரு சாதாரண மழைத்துளி எவ்வளவு வேகத்தில் பூமியில் விழுகின்றது?
மணிக்கு ஏழு மைல்

15. மீன்களே இல்லாத கடல் எது?
சாக்கடல்

16. நம் உடலில் 75 பங்கு கல்சியம் எங்குள்ளது?
பற்களில்

17. உலகிலேயே மிகவும் வேகமாக ஓடும் பூச்சி எது?
கரப்பான் பூச்சி (மணிக்கு 4.6 m ஓடும்)

18. உலகில் மிகப்பெரிய செய்மதி நிறுவனம் எது?
ராய்டர். இது இலண்டனிலுள்ள / ப்ளிட் தெருவில் உள்ளது

19. தினசரி பத்திரிகையைக் கண்டுபிடித்த நாடு எது?
சீனா

20. அமெரிக்காவின் வெள்ளை மாளிகையில் குடியேறிய முதல் அதிபர் யார்?
ஜான்ஆடம்ஸ் ஆண்டு 1800

21. உலகிலேயே மிகப்பெரிய நீச்சல் குளம் எது?
மொரோக்கா நாட்டில் உள்ள ஆர்திலிப்
நீளம் 480அ, அகலம் 75 அ

22. உலகின் மிகப்பெரிய புத்தகத்தை வெளியிட்ட நாடு எது?
ஜப்பான்
நீளம் 3அ, அகலம் 4அ, 50 பக்கங்கள்

23. உணவுகளைப் பதப்படுத்தும் முறையைக் கண்டறிந்தவர் யார்?
லூயி பாஸ்டர்

24. உலகின் மிகப்பெரிய பாற்பண்ணை அமைந்துள்ள நாடு?
சவுதி அரேபியா

25. உலகிலேயே மிகவும் அமைதியான நகரம் எது?
ரங்கூன்

26. குரங்குகளே இல்லாத கண்டம் எது?
ஐரோப்பியா

27. அணுக்கதிர்கள் தாக்கினாலும் இவ்வுலகில் அழியாத உயிரினம் எது?
கரப்பான் பூச்சி

28. உலகில் மிக அதிக மொழிகள் பேசப்படும் நாடு எது?
இந்தியா

29. பிறந்து 77 நாட்களுக்குப் பிறகு கண் திறக்கும் உயிரினம்?
பிளாடிபஸ்

30. நாணயத்தில் முதன்முதலாக உருவத்தை பொறித்தவர் யார்?
மாவீரன் அலெக்சாண்டர்

31. உலகில் எவரெஸ்ட் சிகரத்தை விட உயரமான மலை உச்சி எது?
சிம்பொராசோ மலை உச்சி

32. கணித மேதைக்கு வழங்கப்படும் விருது எது?
ஏபல் விருது

33. இலங்கைக்கு எத்தனையாம் ஆண்டு போதைப் பொருள் கொண்டு வரப்பட்டது?
1960ம் ஆண்டு

34. இலங்கையில் முதலாவது கணினித்தொழிற்சாலை எந்நிறுவனத்தால் எங்கு திறந்து வைக்கப்பட்டது?
E - WIS Information System Ltd நிறுவனத்தால் அம்பாந்தோட்டை சூரியவெவ எனும் இடத்தில் திறந்து வைக்கபட்டது.

35. இலங்கையில் உள்ள பெரிய தீவு எது?
மன்னார் தீவு 136,46 km

ச. சஞ்சிகா
உ/த 2019

## இது நியாயமா?

கல்லுக்குள் உயிர் கொடுத்து
கடவுள் என்றாய்
முள்ளுக்குள் பரந்தபோது!
ரோஜா என்றாய்
நீர் வற்றினாலும்
குளம் என்றாய்
உடலில் அங்கம் இழந்ததும்
ஏன் "ஊனம்" என்கிறாய்
இது நியாயமா சொல்லு ?

ச. கார்த்திகா
க.பொ.த சாதாரணதரம்

# DO YOU KNOW ?

1. Hot water will turn into ice faster than cold water.
2. Mona Lisa has no eyebrows.
3. Ants never sleep!
4. The most common name in the world is Mohammed.
5. When the moon is directly overhead, you will weigh slightly less.
6. Camels have three eyelids to protect themselves from the blowing desert sand.
7. Minus 40 degrees Celsius is exactly the same as minus 40 degrees Fahrenheit.
8. Chocolate can kill dogs, as it contains the bromine, which affects their heart and nervous system.
9. Women blink nearly twice as much as men!
10. You can't kill yourself by holding your breath.
11. People say "Bless you" when you sneeze because when you sneeze, your heart stops for a millisecond.
12. If you sneeze too hard, you can fracture a rib. If you try to suppress a sneeze, you can rupture a blood vessel in your head or neck and die.
13. What do bullet proof vests, fire escapes, windshield wipers and laser printers all have in common?
14. A snail can sleep for three years.

*Miss P.Sukirtha*
*A/L 2019*

1. The sentence, "The quick brown fox jumps over the lazy dog" uses every letter in the English language.
2. "I Am" is the shortest complete sentence in the English language.
3. There are only two words in the English language that have all five vowels in order: " abstemious" and "facetious."
4. The name of all the continents end with the same letter that they start with.
5. TYPEWRITER is the longest word that can be made using the letters only on one row of the keyboard.
6. The "sixth sick sheik's sixth sheep's sick" is said to be the toughest tongue twister in the English language.
7. "Rhythm" is the longest English word without a vowel.
8. Stewardesses is the longest word typed with only the left hand.

*Miss K.Sarmitha*
*A/L 2020*

## அம்மா

என்னை முந்நூறு நாள்கள் சுமந்து
    பெற்ற தாயை எண்ணி இன்பமடைகிறேன்
என்னை இப்பூவுலகினில் பெற்றெடுத்து
    பசித்த போதெல்லாம் நீங்கள்
எமக்காக உங்கள் இரத்தத்தைப் பாலாக்கி
    எனக்கு உணவாக உண்ணக் கொடுத்தீரே
என் சந்தோசத்திற்காக உங்களது
    சந்தோசத்தை சிதைத்தீரே
என்னைப் படிக்க வைப்பதற்கு நீங்கள் - எவ்வளவு
    கஷ்டப்பட்டீர்கள் என நான் அறிவேன்
உங்கள் கனவை நினைவாக்கி - நான் இவ்வுலகம்
    பேசும் கல்விமானாக வருவேன் அம்மா....

**உ. நிதர்சன்**
**தரம் - 7B**

# The Reward

A very pretty woman entered an aircraft and started looking for her seat. She noticed that her seat was next to a person with both hands missing. She hesitated to sit next to him.

That 'pretty' woman told the airhostess that she can't sit in her assigned seat and travel comfortably sitting next to that no-arms person; and asked the airhostess to change her seat. The airhostess enquired "Ma'am may I know the reason"?

The 'pretty' lady replied: "I don't like such people. I don't like sitting next to such people and travel". The airhostess was shocked to hear this from this lady who in appearance looked like a well-mannered and polite person. The 'pretty' lady again told the airhostess that she did not want that seat and demanded the airhostess to find her a different seat.

The airhostess asked the lady to be patient for a little bit and said she will try her best to accommodate her request and looked around for an empty seat. She couldn't find any. The airhostess returned to the lady and said, "Madam! All the seats in this economy class are full. But then for the comfort of our travelers it is our policy to satisfy them to our utmost. So, I will talk to the captain and kindly be patient a bit longer". Saying so, she went to see the captain.

After some time she returned and told the lady, "Madam! We are very sorry for the discomfort to you. In this entire aircraft, there is only one seat vacant and that is in First class. I talked to our team and we took an extraordinary decision. To send a traveler from economy class to First class is happening for the first time in our company history……".

The 'pretty' lady was becoming so ecstatic and even before uttering a word…. The airhostess turned to the person with no arms and said, "Sir, May you please move to the First class? We want to eliminate the tragedy of you traveling next to a manner-less person." Hearing this every one clapped immensely and welcomed the decision. The 'pretty' lady tremendously felt ashamed.

Then the person stood up and said, "I am an ex-serviceman and I lost my both arms in a bomb blast in the Kashmir border during an operation. At first, when I heard the lady talk, I thought: Did I put my life at risk for this kind of people? But after looking at their actions and your all responses, I feel proud that I lost both my arms for my country." And saying so, he walked into the First class.

The 'pretty' lady drowned into the seat fully ashamed.

Beauty is not in what is seen in face and body. Beauty in a good person is in his/her lofty thoughts.

*M.Raksha*
*A/L 2020*

## முள்ளிவாய்க்கால் முற்றம்

கொள்ளி கொண்டு வந்தனவே
கொரூர எறிகணை வீச்சுக்கள்
நண்டுக் குஞ்சுகள் என பார்க்காமல்
நசுக்கி விட்டுச் சென்றனவே!

அணியாய் திரண்டெழுந்த கும்பல்
அடியோடு அழிந்ததே
தொட்டுணர்ந்து துயரத்தை
சொல்லியழ வழியேது

அடியொன்று எடுத்து வைக்க முன்னே
வெடியொன்று படாரென வெடித்தது
கூச்சலிட்டு குழற முற்படவே
கும்பலாய் குவிந்தது பிணங்கள்
உறவுகள் பிரிந்தது உறக்கங்கள் மறந்தது
கவலைகள் சுமந்து – எங்கும்
கன்னாபின்னமாய் மக்கள்

பிஞ்சு மழலை தன் தாயை
கொஞ்சிக் குலாவையிலே
தந்தி கிடைத்தாற் போல்
தவண்டு வந்தது ஷெல்....

உண்டு பத்து பதினைந்து நாளிருக்க
உள்நுழைந்து வயிற்றைக்கழுவ
பாவியன் குண்டு பதுங்குக் குழியில்
பசியைப் போக்குவதற்காய்
சோறு கூட இல்லை
சொல்லனாத் துன்பம் இழந்தேன்
உடலால் கால்களை களைந்தோம்

விண்ணை அடைந்தாள் – தாய்
பிள்ளை அறியாமலே
பசியின் கொடுமையால் முளையில்
பால் பருகிய நிலை தான் அன்றே..

கருவிலே மழலையை சுமந்து
கடுமையான கணைகளிலும்
தாய் செத்தும் – தாய் மண்ணில்
தளராமல் பெற்றெடுத்தாள் சேயை

உறவை இழந்து
உன்னத உலகில் யாம்
வாழும் நிலைதான் என்ற
வாசகம் இனியும் நிலைக்குமா?

ஸ்ரீ. சங்கீதன்
தரம் – 09

## என் தாய்

*பத்து மாதம் சுமை தாங்கி*
*உன் கருவறையில் சிறை வைத்தாய்*
*மஞ்சத்தில் தாலாட்டி - என்னைத்*
*தன் மார்பில் தூங்க வைத்து*
*தூக்கி வளர்த்தாள் என் தாய்*
*கள்ளமில்லா பிள்ளை மனம்*
*வேண்டும் என்று கற்றுத் தந்தாய்*
*கடல் போல் அன்பு காட்டி*
*தன் வயிற்றைப் பட்டினி போட்டு - எனக்கு பாலூட்டி பல*
*தாலாட்டுப் பாட்டுப்*
*பாடி என்னை வளர்த்தாள் என் தாய்*
*அன்பின் இலக்கணமுமாய்த் திகழ்ந்தவளே*
*நின்னாசை நிறைவேற்றி*
*கல்வியிலே பெரியவனாய்*
*நன்றே நிலை நாட்டுவேன்.*

இ. கஜன்
தரம் – 11

## மாணவர்கள் கடைப்பிடிக்க வேண்டியது

உங்களின் குறிக்கோளில் மட்டுமே உயர்ந்த ஆசையும், முக்கிய கவனமும் இருக்க வேண்டும். ஊக்கமும் முயற்சியும் வாழ்வில் முக்கியம். ஒவ்வொரு நாளும் நல்லதை நினைத்து நல்லதையே செய்ய வேண்டும் இறையருளால் நமக்கு நல்ல வழி கிடைக்கும். படித்து உழைத்து பல பட்டங்கள் பெற்று சிறந்த நம்பிக்கையில் செயல்பட வேண்டும். அதுவே உங்களை உயர்ந்தவர்களாக்கும்.

இ. இந்துஜன்
தரம் – 10

## சிந்தனைக்கு

* எங்கு ஒரு நூலகம் திறக்கப்படுகிறதோ அங்கே ஒரு சிறைச்சாலை மூடப்படுகின்றது.

* வாழ்க்கை என்பது இயற்கை அளிக்கும் செல்வம் ஆனால் நல்ல வாழ்க்கை என்பது ஞானம் அளிக்கும் செல்வம்.

* ஓய்வை விவேகத்துடன் பயன்படுத்துவதே கல்வியின் குறிக்கோள்.

* எனக்கென்று உள்ளதை எவரும் தடுக்க முடியாது. எனக்கென்று இல்லாததை எவரும் கொடுக்க முடியும்.

* போர்க்களத்தில் பெறக்கூடிய சில வெற்றிகளை இழக்கக்கூட நான் சம்மதிப்பேன் ஆனால் காலம் வீணாக்கப்படுவதை இழக்கப்படுவதை மட்டும் ஒரு போதும் நான் விரும்ப மாட்டேன்.

* ஒரு மனிதன் விழாமலே வாழ்ந்தான் என்பது பெருமையல்ல. விழுந்த பொழுதெல்லாம் எழுந்தான் என்பதே பெருமை.

* எல்லை மீறிச் சிரிப்பவன் மூடன் சிரிக்காமல் இருப்பவன் வஞ்சகன்.

* மனிதனை உருவாக்குவதில் துன்பமும் இன்பமும் சரிசமமான இடத்தைப் பெறுகின்றன.

* நெஞ்சில் தைரியமும் உண்மையும் இருந்தால் நம்மை நாமே தற்காத்துக் கொள்ளலாம்.

* கீழான இலட்சியத்தில் வெற்றி பெறுவதை விட உயர்ந்த இலட்சியத்தில் தோல்வியடைவது மேல்.

ப.சசிகலா
க.பொ.த உயர்தரம் 2019

## பொது அறிவு

01. ஐந்து கோடி வருடங்களுக்கு முன் தோன்றிய முதல் மீன்?
நட்சத்திர மீன்

02. வாத்து முட்டையிடும் நேரம்?
அதிகாலை மட்டும்

03. பிறந்த அன்றே இறக்கும் பூச்சி?
ஈசல்

04. மிகச் சிறிய இதயம் கொண்ட மிருகம்?
சிங்கம்

05. கண்கள் மூலம் சத்தத்தைக் கேட்கும் ஈருடகவாழி?
தவளை

06. கடல் வாழ் பாலூட்டி?
திமிங்கிலம்

07. பறக்க முடியாத பறவைகள்?
ரியா, எமு, கிவி

08. உலகில் மிகப்பெரிய பாலைவனம்?
சகாராப் பாலைவனம்

09. மூவின மக்களுக்கும் வழிபடக்கூடிய புனித மான மலை?
சிவனொளிபாதமலை

10. இந்து மதத்திற்காக உழைத்த சமயப் பெரியார்?
ஆறுமுகநாவலர்

ப. சாதனா
தரம்: 08

## விந்தை உலகு

உள்ளங் கவர்ந்த வாழ்வை
இவ்வுலகில் வாழ வழியுண்டா?
முன்னோர் வாழ்ந்த வாழ்வில்
இன்று முன்னேற்றம் கண்டது
சீர்கேடுகளில் மட்டுமே

விஞ்ஞானத்தால்
விண்வெளியின் ஆளும் மனிதன்
வாழ்க்கையின் விடியல்களைத்
தொலைத்து விட்டான்

வீதியில் இறங்க
விசமிகள் சூழ்கின்றார்கள்
விதைத்தவனே வாழ்வை
அறுவடை செய்யும் அவலம்

உயிரைக் காப்பாற்ற கற்றுக்
காவிக்கொள்ளும் கலக்கம்
உணவே நஞ்சாகி
உடலை உருக்கும் சலனம்

மனிதனை ஆளும் தொழில்நுட்பமும்
தொடரும் தொல்லைகளும்
போதையின் மோகமும்
வாழ்க்கையை வடிவமைக்க
வாழ்வதெப்படி
வாழ்க்கையை இழந்து விட்டால்
மனிதா வாழ்க்கையை இழந்து விட்டாய்
உன் அறிவால்
பசுமையான வாழ்வைப் பலமாக்கு

சி. கீதா
க.பொ.த உயர்தரம் 2019

## அம்மா

பத்துமாதம் சுமந்து
என்னைப் பெற்றெடுத்த அன்னையே
என்றும் நினைவுகள்
என் மனதில் சுகமம்மா

அன்புக்கு இலக்கணம் - நீ
என் உயிருக்கு இலக்கியம் - நீ
உன் உதிரத்தைப் பாலாக்கி
எனக்கு உணவளித்தாய் - நீ

உன் வயிறு பசியால் கீதம் இசைக்க
என் வயிறு வளர்த்தவள் - நீ
வானில் நிலவைப் போல்
என்னோடு இருப்பேன் என்கின்றாய்

கண்ணின் இமை போல்
கடைசிவரை இருப்பேன் என்றாய்
எம்மை யாராலும்
பிரிக்க முடியாது என்றாய்

கடைசியில் ஏன் என்னை
விட்டுப்பிரிந்து சென்றாய்
அன்னையே என்முன்னால்
தெய்வமாகி ஒரு தடவை ஒளிர்வாயா!

அடுத்த ஜென்மத்தில்
நீ என் சேயாகவும்
நான் உன்னைச் சுமக்கும்
தாயாகவும் வரவேண்டும்
அடுத்த ஜென்மம் முடியவே கூடாது
அதில் நாம் பிரியவே கூடாது.

வி. கௌசனா
தரம் - 10

## விடியலை நோக்கி

பள்ளிப்பருவத்தில்
பள்ளி செல்ல முடியவில்லை
காலங்கற்றுத்தந்த நாகரீகம்
கலாசாரத்தை கைது செய்து விட்டதா?
சுதந்திரம் தருவீரா?
பட்டாம் பூச்சியாய் பறந்து செல்ல

மது மயக்கம்
மாதுவை அழிக்கிறதா?
அந்திப் பொழுதில்
அன்பரும் அன்னியராக்குவர்
மதி மயக்கம்
மானிடர் உயிரைக்
காவு கொள்கின்றதே
போதையற்ற உலகைத் தருவீரா?
போதும் நாடகம் பொறுமையில்லை

விந்தை உலகிடை
விஞ்ஞானம் விதைத்த
தொழில்நுட்ப விருட்சமானாலும்
வேலையில்லாத் திண்டாட்டம்
வேதனையே விளைபயிராய்
இன்னலைப் போக்க
இன்றே விடியலை நோக்கி

ஜெ. டக்ஷனா
க.பொ.த உயர்தரம் 2018

## அன்பு

அன்பு என்னும் மூன்றெழுத்தில்
ஆழமான உள்ளத்தில் - பாசம்
என்னும் விதையை விதைத்தவளே!
ஒளிமயமான எம் எதிர்காலத்தில்
ஒளிரப் போகும் அணையாத தீபம்
அணைந்து போகாமல் ஒளி கொடுக்கும் - எம்
தாயே இவ்வுலகில் உங்கள் மனம் போல்
நானும் கல்வியில் சீரும் சிறப்பும் பெற்று
வெற்றி இலக்கை அடைவேன்
நற்பிரஜையாக இவ்வுலகில் வாழ
இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

க. நிறோஜன்
தரம் - 07

## என் உயிர் அம்மா

பத்து மாதம் சுமந்து பெற்று – நீ
இப்போது பத்து நிமிடம் கூட என்
அருகில் இருப்பதற்கு தாமதமாக
இருக்கிறது
இதற்கெல்லாம் காரணம்
எமைப் படைத்த இறைவனே.

உன் கருவறையில் நானிருந்து
உதைத்தது உன்னை
நோகடிக்க அல்ல பத்து மாதமாய்
சுமக்கும் உன்முகம் பார்க்கவே.

பிஞ்சு வயதில் நான் அழுதது
பசியினால் அல்ல
பால் குடிக்கும் சாட்டில் உன்
இதயத்தை முத்தமிட....

பள்ளியில் என்னை சேர்க்கும்போது
நான் அழுதது பயத்தினால் அல்ல
உன் பாசத்தை பிரிகிறேனோ
என்ற பயத்தினால்

இங்கு தனிமையில் அழுகிறேன்
உறவுகள் இல்லாமல் அல்ல
உன் அன்பு காணாமல் அம்மா!.

த. தனுசியா
தரம் : 10

சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமைத்துவக் குழு (ஆண்)



சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலைய முகாமைத்துவக் குழு (பெண்)




கருணை இல்ல அபிவிருத்தி நிலைய முகாமைத்துவக் குழு (பெண்)



## கல்விச் சுற்றுலாவின் நிழல்கள்...













தையற் பயிற்சி



சீர்மிய வகுப்பு



சிறார்களின் கைவண்ணங்கள்



நூலகம்



கணினிப் பயிற்சி நிலையம்



காளான் வளர்ப்பு பயிற்சி நிலையம்





# விடுகதைகளும் விடைகளும்

01. நித்திரையின் தூதுவன் நினையாமல் எட்டிப்பார்ப்பான் அவன் யார்?
கொட்டாவி

02. கண்ணில் கண்டதை சுருட்டிக் கொள்வான் வண்ண நிறங்களில் வெளியேற்றுவான் அவன் யார்?
கமரா

03. கண்ணுக்குத் தெரியாதவன் உயிருக்கு உகந்தவன் யார்?
காற்று

04. சுற்றுவது தெரியாது ஆனால் சுற்றிக் கொண்டே இருப்பான்?
பூமி

05. கழற்றிய சட்டையைத் திருப்பிப் போடமாட்டான் அவன் யார்?
பாம்பு

06. வாயில்லை வார்த்தைகள் சொல்லுவான் உயிரில்லை வீட்டிற்கு வருவான் அவன் யார்?
கடிதம்

07. மண்ணில் பிறந்து விண்ணில் மறையும் வாசனை தந்து நெஞ்சில் நிறையும் அது எது?
சாம்பிராணி

08. உரசினால் உயிரை விடுவான் அவன் யார்?
தீக்குச்சி

09. அடர்ந்த காட்டிற்குள் நுழைவான் அலைந்து திரிந்து அழகு படுத்துவான் அவன் யார்?
சீப்பு

10. அடித்தால் விலகாது அணைத்தால் நிற்காது அது என்ன?
நீர்

11. பழகினால் மறக்காதவன் பயந்தோரை விடாதவன் அவன் யார்?
நாய்

12. ஆடிஆடி நடப்பான் அரங்கத்தில் நடப்பான் அவன் யார்?
யானை

13. ஆனை விரும்பும், சேனை விரும்பும், அடித்தால் வலிக்கும் கடித்தால் இனிக்கும்
கரும்பு

14. ஆயிரம் பேர் அணிவகுத்தாலும் தூசி கிளம்பாது அது என்ன?
எறும்பு

15. அவன் அழுதால் உலகம் சிரிக்கும் அவன் யார்?
வானம்

16. ஊசி போல் இருப்பான் ஊரையே எரிப்பான் அவன் யார்?
தீக்குச்சி

17. வெளியில் போகும்போது நண்பன் வீட்டிற்கு வந்தால் விரோதி அவன் யார்?
செருப்பு

**க. ழலக்சனா**
**தரம் – 07**

## பழமொழிகள்

01. அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

02. தொட்டில் பழக்கம் சுடுகாடு மட்டும்

03. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு

04. ஆனைக்கும் அடி சறுக்கும்

05. கழுதைக்குத் தெரியுமா கற்பூர வாசனை

06. அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு

07. ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்.

08. ஆழம் அறியாமல் காலை விடாதே.

09. காற்றுள்ள போதே தூற்றிக்கொள்.

10. ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா?

11. அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்.

12. இளமையில் கல்வி சிலை எழுத்து.

13. ஏட்டுச் சுரக்காய் கறிக்கு உதவாது.

14. துள்ளுகின்ற மாடு பொதி சுமக்கும்.

15. காக்கைக்கும் தன் குஞ்சு பொன் குஞ்சு.

16. பணம் என்றால் பிணமும் வாய் திறக்கும்.

17. ஆறின கஞ்சி பழங்கஞ்சி

18. வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்.

19. இங்கிதம் தெரியாதவனுக்கு சங்கீதம் தெரிந்தும் என்ன பயன்

20. அகல உழுவதை விட அழ உழு

21. மின்னுவதெல்லாம் பொன்னல்ல.

22. எலி வளையானாலும் தனிவளை வேண்டும்.

23. சாண் ஏற முழம் சறுக்கும்.

கி. உதயகிருசாலினி
தரம் – 06

## வாழ்வதற்காக வாசி

அன்பு காட்டு ஆனால் அடிமையாகி விடாதே
இரக்கம் காட்டு ஆனால் ஏமாற்றிவிடாதே
பணிவாய் இரு ஆனால் கோழையாய் இராதே
கண்டிப்பாய் இரு ஆனால் கோபப்படாதே

சிக்கனமாய் இரு ஆனால் கஞ்சப்படாதே
வீரமாய் இரு ஆனால் போக்கிரியாய் இராதே
தர்மம் செய் ஆனால் ஆண்டியாய் ஆகிவிடாதே
பொருளைத்தேடு ஆனால் பேராசைப்படாதே

நம்ப நட ஆனால் நம்பி நடவாதே
உழைப்பை நம்பு ஆனால் ஊமையாகி விடாதே
கடவுளை நம்பு ஆனால் ஏமாற்றி விடாதே
உன்னால் பெற்ற தாயை மறந்து விடாதே

சிவபெருமான் ராமனுக்கு கூறியது – சிவகீதை
இறைவன் மனிதனுக்கு உரைத்தது – பகவத்கீதை
மனிதன் இறைவனுக்குரைத்தது – திருவாசகம்
மனிதன் மனிதனுக்குரைத்தது – திருக்குறள்

சே. சுதர்சனா
தரம் 08

## நட்பு

*பவித்திரமானது நட்பு*
*பலருக்குக் கிடைப்பதில்லை*
*பணம் மேல் குறிவைக்கும்*
*பச்சோந்திகளுக்கு*
*குணம் எனும் கோபுரத்தை*
*தரிசிக்க கிடைப்பதில்லை*
*தரிசு நில வாழ்க்கையிலே*
*விளைவதென்று எதுவுமில்லை*
*தரங்கெட்ட மனிதர்களே*
*தங்கத்தைத் தின்னலாமோ?*

டேவிட். பவித்திரா
தரம்:–09

# தமிழிலக்கிய நூல்களும் அவற்றின் ஆசிரியர்களும்

## சங்க காலம்

| | | |
|---|---|---|
| திருமுருகாற்றுப்படை | - | நக்கீரனார் |
| பொருநர் ஆற்றுப்படை | - | முடத்தாமக் கண்ணியார் |
| சிறுபாணாற்றுப்படை | - | நல்லூர் நத்தத்தனார் |
| பெரும்பாணாற்றுப்படை | - | உருத்திரன் கண்ணனார் |
| கூத்தராற்றுப்படை | - | பெரும் கௌசிகனார் |
| குறிஞ்சிப் பாட்டு | - | கபிலர் |
| முல்லைப்பாட்டு | - | நப்பூதனார் |
| மதுரைக்காஞ்சி | - | மாங்குடி மருதனார் |
| பட்டினப்பாலை | - | கடியலூர் உருத்திரங் கண்ணனார் |
| நெடுநல் வாடை | - | நக்கீரர் |

## சங்க மருவிய காலம்

| | | |
|---|---|---|
| திருக்குறள் | - | திருவள்ளுவர் |
| நான்மணிக்கடிகை | - | விளம்பிநாகனார் |
| இன்னா நாற்பது | - | பிற்காலக் கபிலர் |
| இனியவை நாற்பது | - | பூதஞ் சேந்தனார் |
| திரிகடுகம் | - | நல்லாதனார் |
| ஆசாரக் கோவை | - | பெருவாயில் முள்ளியார் |
| மணிமேகலை | - | கூலவாணிகன் சாத்தனார் |
| களவழி நாற்பது | - | பொய்கையார் |
| அற்புதத்திருவந்தாதி | - | காரைக்கால் அம்மையார் |
| திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம் | - | காரைக்கால் அம்மையார் |
| திருவிரட்டை மணிமேகலை | - | காரைக்கால் அம்மையார். |
| சிலப்பதிகாரம் | - | இளங்கோவடிகள் |
| 1ம் திருவந்தாதி | - | பொய்கையாழ்வார் |
| 2ம் திருவந்தாதி | - | பூதத்தாழ்வார் |
| 3ம் திருவந்தாதி | - | பேயாழ்வார். |

## பல்லவர் காலம்

| | | |
|---|---|---|
| திருக்கையால ஞான உலா | - | சேரமான் பெருமான் |
| தேவாரங்கள் (1 -7 திருமுறைகள்) | - | அப்பர், சம்பந்தர், சுந்தரர் |
| திருவாசகம் | - | மாணிக்கவாசகர் |
| திருக்கோவையார் | - | மாணிக்கவாசகர் |
| திருமந்திரம் | - | திருமூலர் |
| பொன் வண்ணத்தந்தாதி | - | சேரமான் பெருமாள் |
| திருக்கோவையார் | - | சேரமான் பெருமாள் |
| திருப்பல்லாண்டு | - | சேந்தனார் |
| நான்முகன் | - | திருமாளிசையாழ்வார் |
| பெரிவாழ்வார் திருமொழி | - | பெரியாழ்வார் |
| திருமாலை | - | தொண்டரடிப் பொடியாழ்வார் |
| திருப்பள்ளியெழுச்சி | - | தொண்டரடிப் பொடியாழ்வார் |

| | | |
|---|---|---|
| பெரிய திருமொழி | - | திருமங்கையாழ்வார் |
| திருவெழுக் கூற்றிருக்கை | - | திருமங்கையாழ்வார் |
| திருக்குறுந் தாண்டகம் | - | திருமங்கையாழ்வார் |
| திருநெடுந்தாண்டகம் | - | திருமங்கையாழ்வார் |
| பெரிய திருமடல் | - | திருமங்கையாழ்வார் |
| திருப்பாவை | - | ஆண்டாள் |
| நாச்சியார் திருமொழி | - | ஆண்டாள் |
| பெருமாள் திருமொழி | - | குலசேகர ஆழ்வார் |
| திருவிருத்தம் | - | நம்மாழ்வார் |
| திருவாசிரியம் | - | நம்மாழ்வார் |
| பெரிய திருவந்தாதி | - | நம்மாழ்வார் |
| திருவாய் மொழி | - | நம்மாழ்வார் |

**சோழர் காலம்**

| | | |
|---|---|---|
| சீவகசிந்தாமணி | - | திருத்தக்க தேவர் |
| குண்டலகேசி | - | நாதகுப்தனார் |
| சூளாமணி | - | தோலா மொழித்தேவர் |
| யசோதர காவியம் | - | வெண்ணாவலூர் உடையார்வோர் |
| நாககுமார காவியம் | - | குறவி |
| பெரிய புராணம் | - | சேக்கிழார் |
| கந்த புராணம் | - | கச்சியப்ப சிவாச்சாரியர் |
| கம்பராமாயணம் | - | கம்பர் |
| கலிங்கத்துப்பரணி | - | சயங்கொண்டார் |
| குலோத்துங்க சோழன் பிள்ளைத்தமிழ் | - | ஒட்டக்கூத்தர் |
| நெஞ்சு விடுதூது | - | உமாபதிச் சிவாச்சாரியார் |
| நன்னூல் | - | பவணந்தி முனிவர் |
| நேமிநாதம் | - | குணவீர பண்டிதர் |

**நாயக்கர் காலம்**

| | | |
|---|---|---|
| கந்தர் அலங்காரம் | - | அருணகிரிநாதர் |
| கந்தர் அனுபூதி | - | அருணகிரிநாதர் |
| திருப்புகழ் | - | அருணகிரிநாதர் |
| மகாபாரதம் | - | வில்லிபுத்தூர் ஆழ்வார் |
| கச்சிக் கலம்பகம் | - | இரட்டையர் |
| தில்லைக்கலம்பகம் | - | இரட்டையர் |
| ஏகாம்பரநாதருலா | - | இரட்டையர் |
| தனிச் செய்யுள் சிந்தாமணி | - | காளமேகப்புலவர் |
| திருவானைக்கா உலா | - | காளமேகப் புலவர் |
| திருவிளையாடற்புராணம் | - | பரஞ்சோதி முனிவர் |
| சேது புராணம் | - | நிரம்பவழகிய தேசிகர் |
| திருப்பரங்கிரிப் புராணம் | - | நிரம்பவழகிய தேசிகர் |

மு. டக்ஷா
க.பொ.த உயர்தரம் 2018

# இலக்கணமும் அவற்றின் உரையாசிரியர்களும்

| இலக்கணம் | உரையாசிரியர் |
|---|---|
| இறையனார்அகப் பொருள் | நக்கீரர் |
| தமிழ்நெறி விளக்கம் | நூலாசிரியர் |
| இறையனார் அகப்பொருள், உரை | நீலகண்டனார் |
| தொல்காப்பியம், பொதுப்பாயிரம் | அத்திரையன் பேராசிரியர் |
| யாப்பருங்கலக் காரிகை | குணசாகரர் |
| தொல்காப்பியம் முழுமையும் | இளம்பூரணர் |
| வீரசோழியம் | பெருந்தேவனார் |
| வச்சணந்திமாலை | உரையாசிரியர் |
| தொல்காப்பியம் பொருள் | பேராசிரியர் |
| அபிநயம் | இராச பவித்திறப் பல்லவதரையர் |
| தொல்காப்பியம் சொல் | சேனாவரையர் |
| நம்பியகப்பொருள் | நாற்கவிராயநம்பி |
| நன்னூல் | மயிலைநாதர் |
| களவியற் காரிகை | உரையாசிரியர் |
| தொல்காப்பியம் சொல் | கல்லாடர் |
| தொல்காப்பியம் சொல் | பழைய உரையாசிரியர் |
| தொல்காப்பியம் சொல் | தெய்வச்சிலையார் |
| புறப்பொருள் வெண்பாமாலை | சாமண்டி தேவநாயகம் |
| நேமிநாதம் | உரையாசிரியர் |

பா.நாகரூபி
க.பொ.த உயர்தரம் 2019
கலைப்பிரிவு

# விடுதலை

பத்து மாதம் அன்னையின் கருவறையில்
பக்குவமாய் வளர்ந்தோம் பாரினைக் காண்பதற்காக
ஜனனம் எனும் பெயரில்
விடுதலையாகின்றோம்

கல்வியறிவை விருத்தி செய்ய
பள்ளிக்குச் சென்று
பத்தொன்பது வயதினிலே அதினின்றும்
விடுதலையாகின்றோம்

நம் வாழ்வினை முடிவு செய்யவும்
பல்கலையும் விருத்தி செய்யவும்
பல்கலைக்கழகம் சென்று
மூன்றே ஆண்டுகளில் அதினின்றும்
விடுதலையாகின்றோம்

மண்ணில் மதிப்புடன் வாழ்ந்த நாம் – இறுதியில்
மண்ணுக்கே இரையாக
மரணம் எனும் பெயரில்
இவ்வுலகை விட்டே விடுதலையாகின்றோம்

இத்தனை விடுதலையும் பெற்ற நாம்
ஈழத்திரு நாட்டில் உள்ள
இன்னல்களிலிருந்து
விடுதலையாவது எப்போது?

சு. நந்தினி
தரம் : 09

## கலங்காதே அம்மா

ஆடு மாடு கூட
அடி பட்டா தடவுது
அம்மா நீ அருகில்லையே
என் தலை கோத!

இரத்தம் சொட்டச் சொட்ட
அடைபட்டுக் கிடக்கிறேன்
அறைபட்டுக் கிடக்கிறேன்
ஏன் அம்மா
என்னைப் பெற்றாய்!
இழிந்த உலகில்!
புதைபடவா!
போக்கிரிகள்
காலில் மிதிபடவா?

நெஞ்சிலே சிலுவையும்
நெற்றியிலே ஆணியும்
வஞ்சகர், அறைந்தாலும்
காலில் விழுந்து
கெஞ்சுவேன் என
நினைக்காதே அம்மா
உயிர்ப்பிச்சை கொடு என்று
மூச்சைக் கொடுத்தேனும் தமிழர்
மானம் காத்திடுவேன்
கலங்காதே தாயே
காலம் பதில் சொல்லும்
இது தாய் மேல்
ஆணை.

லவகுசன் லஜீனா
தரம் : 11

## அன்பு

உண்மையான நெஞ்சங்களை
நேசிக்க முடியாவிட்டாலும்
காயப்படுத்தாதே...!
அது கடைசிவரை
உன்னை நேசிக்கும்.

மேகம் மிதந்த போதும்
காகம் பறந்த போதும்
ஆகாயம் அழாது
உன்னைப் பற்றி யார்
என்ன சொன்னால் என்ன
இந்தக் காதில் வாங்கி
அந்தக் காதில் தள்ளு.

கோபத்தில் நிதானமும்
குழப்பத்தில் அமைதியும்
தோல்வியில் பொறுமையும்
வெற்றியில் தன்னடக்கமும்
துன்பத்தில் தைரியமும்
வாழ்க்கையை இனிதாக்கும்.

நேரம் தவறாமை - என்றும்
கருவியை உபயோகிப்பவன்
எப்பொழுதுமே
கதாநாயகன் தான்.

காசு பணம் கூட
பிச்சையாக கடனாக கேட்கலாம் - ஆனால்
அன்பிற்காக ஒருவரிடமும் கெஞ்சாதீர்கள்
கண்ணீர் மட்டுமே பரிசு.

இ.சாலினி
தரம் - 11

# கனவில் ஒருநாள்

அன்று ஒரு நாள்! இல்லத்தில்
அதிகாலை மணி ஒலித்தது
ஆதங்கத்துடன் எழுந்து
ஆசையாய்ப் புத்தகத்தை எடுத்தேன்.

இதமாக வணிக பாடத்தைக் கற்கையில்
இன்று காலை கண்டகனவு நினைவுக்கு வந்தது.
ஈழத்தில் முதல்நிலை வகிக்க போட்டியாய்
ஈட்டி செல்லும் வேகத்தில் கற்கிறேன்.

உதிரத்தில் துடிதுடிப்பும் – என்
உள்ளத்தில் சுறுசுறுப்பும்
எளிமையான தோற்றத்துடன் – நான்
எல்லாம் அறிவதற்காய் கற்றுக்
கொண்டிருக்கிறேன்.

ஏற்கனவே பெரியவர்கள் குறித்த திகதி – அன்று
ஏராளமானோர் எதிர்பார்த்த பரீட்சை
நெருங்குகிறது
ஐயம் கொண்டு கற்று முடித்த பாடங்கள் – நான்
ஐந்தே நாட்களில் மீட்டுக் கொண்டேன்.

முதல் நாள் பரீட்சைக்குச் சென்றேன். அதற்குள்
ஒன்பது நாட்களும் முடிந்து விட்டன.
ஓரிரு மாதங்கள் கழிந்தன. அன்று
ஓர் அதிசயம் என் பெறுபேறு "3A" ஆக இருந்தது.

அவ்வாறான என் கனவு, மணி ஓசை கேட்டு
அழகாக மனதிலிருந்து மறைந்து போனது
ஆர்வத்துடன் அதை நான் நனவாக மாற்ற
ஆணித்தரமாய் முயற்சிக்கிறேன் என்
வாழ்க்கைக்காக!

ஞா. தனுஷா
க.பொ.த உயர்தரம் 2018

# உலகப் புகழ் கால்பந்து விளையாட்டு

கால்பந்து விளையாட்டை 2000 வருடங்களுக்கு முன்னரே சீனர்கள் கண்டு பிடித்து விட்டனர். ஆனால் நாம் தற்போது விளையாட்டு இங்கிலாந்தில் 1863ஆம் ஆண்டு அறிமுகம் செய்து வைக்கப்பட்ட தாகும். அக்காலத்தில் 15 தொடக்கம் 20 வீரர்களால் விளையாடப்பட்ட இவ்விளையாட்டு 11 வீரர்களால் தற்போது விளையாடப்படுகிறது. உலகிலேயே அதிக இரசிகர்களை கொண்ட விளையாட்டு கால்பந்து ஆகும். கால்பந்து தற்போது புதிய விதிமுறைகளில் ஏற்பட்டுள்ள மாற்றம் காரணமாக இப்போட்டிக்கு மேலும் இரசிகர்கள் அதிகரித்து வருவதாக ஆய்வுகள் மூலம் தெரிய வந்துள்ளது. அது மட்டுமல்ல எமது நாட்டிலும் கூட கால்பந்து முக்கிய இடத்தை வகிக்கின்றது. அடுத்த உலகக் கிண்ண சுற்றுப் போட்டிகள் ரஷ்ய நாட்டில் நடைபெற உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

J.புவிராஜ்
தரம்:–11

# தாயே உன்னை மறவேன்

நான் செய்த தவறுக்கு
தண்டனை எனக்குத் தந்து
வேதனையை நீங்கள்
அல்லவா அனுபவித்தீர்கள்

எத்தனை அன்பு அரவணைப்பு
எத்தனை அறிவுரைகள் ஆலோசனைகள்
எல்லாம் எதற்கு
என் வாழ்வு வளம் பெறத்தானே

எத்தனை நாள்
மழையில் நனைந்தீர்கள்
வெயிலில் காய்ந்தீர்கள்
பசியை மறந்தீர்கள்

உங்கள் நலனை விட
என் நலனில் தானே
அதிகம் அக்கறை செலுத்தினீர்கள்
நான் என் ஆயுள் முழுவதும்
உங்களுக்குக் கடமைப்பட்டுள்ளேன் அம்மா
மறு பிறவியிலும் நான் உம் மகளாய்
பிறக்கும் வரம் வேண்டும் அம்மா!

க.நாகதர்சினி
க.பொ.த உயர்தரம் 2019

| | |
|---|---|
| 01. ஓஹோ! ஆஹா ! | Marvelous ! |
| 02. சபாஷ்! | Well done ! |
| 03. என்ன அழகு! | Beautiful ! |
| 04. அடடே! | Wow ! |
| 05. அடகடவுளே! | Oh My God ! |
| 06. பிரமாதம்! | Wonderful ! |
| 07. அட பாவமே | How sad! |
| 08. ஐயா! கொஞ்சம் கேளுங்கள் | Hello ,Listen! |
| 09. எவ்வளவு பயங்கரம் | How terrible! |
| 10. எவ்வளவு மோசம் | How absurd! |
| 11. எவ்வளவு இனிமை | How sweet! |
| 12. எவ்வளவு அழகு | How lovely! |
| 13. சீக்கிரம் | Hurry up |
| 14. உண்மையாகவா ? | Really? |
| 15. அப்படியா | Is it? |
| 16. நன்றி | Thanks |
| 17. வாழ்த்துக்கள் | Congratulations |
| 18. என்ன அபத்தம் | What nonsense ! |
| 19. நல்வரவு | Welcome |

## சிறு சொற்றொடர்கள் (phrases)

| | |
|---|---|
| 01. இதோ வருகிறேன் | Just coming |
| 02. ரொம்ப நல்லது | Very Well |
| 03. சரி | O.K |
| 04. கவனமாக இருங்கள் | Take care |
| 05. நாளை சந்திக்கிறேன் | See you tomorrow |
| 06. ஆம்அய்யா | Yes sir |
| 07. சென்று வாருங்கள் | Good bye |
| 08. ஒன்றுமே இல்லை | Nothing else |
| 09. விசேசமேதும் இல்லை | Nothing special |
| 10. வேறு ஏதாவது ? | Anything else |

*G.Jilona*
*A/L 2020*

## விவசாயப் பண்ணை









மருத்துவ முகாம் - 2016





முறைசாராக் கல்விக் கண்காட்சி







கருணை இல்லச் சிறுவர் அபிவிருத்தி நிலையச் சித்திரைப் புத்தாண்டு விழா



கராத்தே - மாகாண மட்டத்தில் வெற்றி பெற்று தேசிய மட்டத்திற்கு சென்ற கருணை இல்ல அபிவிருத்தி நிலையச் சிறார்களுக்கு உரும்பிராய் இந்துக் கல்லூரி வழங்கிய கௌரவிப்பு - 2017











# Books are my best Friends

All human beings yearn for friends. But genuine friends are not common. This is because friends are unfaithful or changeable or death may separate them. Happy is the man who acquires the habit of reading while he is young. It is just like acquiring a life-long source of pleasure. He will never be lonely.

He always has a pleasant occupation during his leisure. The piles of books we have are really better then the choicest gold or silver. Having books is indeed like owning great treasures.of knowledge, noble thoughts and high ideals.

The blessings which the reading habit confers on the possessor are many. If he chooses the right kind of pleasure. Some books like fiction are read only for pleasure.

But these are not good at all times. It is just like eating cakes and sweet meats. As we need plain wholesome food for a healthy body, so must we have serious reading for the mind.

*T.Disaliny*
*Grade -08*

# நூலின் அமைப்பு

**பண்புகள்:- ஆங்கில அகர வரிசையில்**

| | |
|---|---|
| Accuracy | துல்லியம் |
| Brevity | சுருக்கம் |
| Confidence | நம்பிக்கை |
| Dignity | கண்ணியம் |
| Emphasis | அழுத்தம் |
| Facility | வாய்ப்பு வசதி |
| Genuineness | உண்மையான |
| Honesty | நேர்மை |
| Illustration | விளக்கப்படங்கள் |
| Judgement | தீர்ப்பு |
| Knowledge | அறிவு |
| Logic | காரண காரிய தொடர்பு |
| Mechanical neatness | அமைவு நேர்த்தி |
| Normal procedure | இயல்பான படிமுறை |
| Objectivity | புறவயத்தன்மை |
| Planing | திட்டமிடல் |
| Qualifications | தகுதி |
| Respect | மரியாதை |
| Strict | கண்டிப்பான |
| Thoroughess | செம்மை |
| Unity | ஒருமைப்பாடு |
| View point | நோக்கு |
| Word choice | சொற்தேர்வு |
| Xeniality | விருந்துறவு |
| Your point | உங்கள் பார்வை |
| Zest | ஆர்வம் |

*T.Hemapriyan*
*A/L (2019)*

# My dream for my country

Everybody has dreams about his own country. Well I also have a dream for my country, that is to make this country self sufficient once again. I stress the words "once again" because this country had been a self sufficient country especially in food. Many have forgotten the fact that this country was once called the granary of the East. it is because our fore fathers had sufficient food for their consumption and they had exported the excess food to the nearby countries as well. So why can't we do it again. If i'm given the chance i'm sure I can make this a reality.

Now let me explain how I'm going to do it. Our forefathers did this miracle by storing water which could be used in the dry season They had built a large number of tanks for this purpose.It was Parakramabahu the great who once said that we should not let even a single drop of water to flow down to the sea without making a proper use of. He had explained the need of proper water management in these words. So brothers and sisters if i'm given a chance the first thing I would do is to repair the tanks and build some more tanks where necessary.

After supporting the irrigation system I will help the farmers with other facilities for farming. I will give fertilizers and seed paddy for them free of charge. Because as it is a good investment i'm sure the government will have to do that. I will employ many agriculture assistants and train them here and abroad to make them knowledgeable and to be well acquainted with the new methods of agriculture many young boys and girls today hate farming and Agriculture as they think it is a shame to be engaged in such professions. First of all, I will change this attitude and will make them love this occupation. In fact Agriculture is a great service and also an asset of a country because without it we all will have to die of starvation. If I can do all these things, I'm sure I can make this country self sufficient once again.

*Nirosha.T*
*A/L 2019*

# சர்வதேச தினங்கள்

Feb. 12 உலக இளைஞர் தினம்.
Feb. 28 சர்வதேச அறிவியல் தினம்,
உலக நோயாளர் தினம்
Mar. 08 உலக மகளிர் தினம்.
Mar. 11 உலகப் பொதுநலவாய தினம்.
Mar. 13 உலகச் சிக்கன தினம்.
Mar. 15 உலக ஊனமுற்றோர் தினம்.
Mar. 22 சர்வதேச குடிநீர் தினம்.
Mar. 23 உலக வளிமண்டல தினம்.
Apr. 01 உலக முட்டாள் தினம்.
Apr. 07 உலக சுகாதார தினம்.
Apr. 12 உலக தாதிகள் தினம்.
Apr. 12 உலக விண்வெளி தினம்.
Apr. 22 உலக பூமி பாதுகாப்பு தினம்.
Apr. 23 உலக புத்தக தினம்.
May 01 சர்வதேச தொழிலாளர் தினம்.
May 03 சர்வதேச பத்திரிகை சுதந்திர தினம்.
May 08 சர்வதேச செஞ்சிலுவை தினம்.
May 08 சர்வதேச செம்பிறை தினம்.
May 14 சர்வதேச அன்னையர் தினம்.
May 15 சர்வதேச குடும்ப நல தினம்.
May 17 உலக தகவல் தொடர்பு தினம்.
May 18 உலக நூதனசாலை தினம்.
May 31 சர்வதேச புகைத்தல் மறுப்பு தினம்.
June 05 சர்வதேச சுற்றுச் சூழல் தினம்.
June 07 உலகதொல்பொருளியலாளர்தினம்.
June 26 சர்வதேசபோதைப்பொருள்எதிர்ப்பு
June 27 உலக நீரிழிவாளர் தினம்.
July 11 உலக சனத்தொகை தினம்.
July 17 உலக வறுமை ஒழிப்பு தினம்.
July 28 சர்வதேச அகதிகள் தினம்.
Aug.29 சர்வதேச விளையாட்டு தினம்.
Sept. 08 சர்வதேச எழுத்தறிவு தினம்.
Sept. 16 உலக ஓசோன் தினம்.
Sept. 25உலக செவிப்புலனற்றோர் தினம்
Sept 27 உலக சுற்றாடல் தினம்.
Oct. 01உலக மதுவிலக்கு தினம்.
Oct. 02 உலக குடியிருப்பு தினம்.
Oct. 03 சர்வதேச மது ஒழிப்பு தினம்.
Oct. 03 சர்வதேச உயிரினங்கள் தினம்.
Oct. 05 உலக சிறுமிகள் தினம்.
Oct. 06 சர்வதேச ஆசிரியர் தினம்.
Oct. 09 சர்வதேச அஞ்சல் தினம்.
Oct. 10 உலக உளச் சுகாதார தினம்.
Oct. 15 சர்வதேச வெள்ளைப்பிரம்பு தினம்.
சர்வதேச விழிப்புலனற்றோர் தினம்.
Oct. 16 உலக தரநிர்ணய தினம்.
Oct. 16 சர்வதேச உணவு தினம்.
Oct. 21 சர்வதேச விவசாய தினம்.
Oct. 24 சர்வதேசஐக்கிய நாடுகள்சபை தினம்.
Oct. 30 சர்வதேச சேமிப்பு தினம்.
Nov. 20உலக சிறுவர் உரிமை தினம்.
Nov. 21சர்வதேச கடற்றொழில் தினம்.
Dec. 01 உலக எயிட்ஸ் தினம்.
Dec. 02 உலக வலது குறைந்தோர் தினம்.
Dec. 10 சர்வதேச மனித உரிமைகள் தினம்.
Dec. 13 சர்வதேச சிறுவர் ஒலி பரப்பு தினம்.

சி.பிறின்சிகா
க. பொ.த உயர்தரம் 2019

# சைவ வித்தியா விருத்திச் சங்கம் அன்றும் இன்றும்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இலங்கைச் சைவர்கள் மத்தியில் கல்வியின் முக்கியத்துவம் உணரப்படலாயிற்று. அன்று பெரும்பாலான பாடசாலைகள் கிறிஸ்தவ மிஷனறிகளாலேயே நடாத்தப்பட்டன. இப்பாடசாலைகளில் கல்வி கற்பதற்காக சைவர்கள் பலர் மதமா றினார்கள். சைவப் பாரம்பரியங்களைப் படிப்படியாக கைவிடத் தொடங்கினர். இத்தகைய சூழ்நிலையில் சைவத்தமிழ்ப் பாரம்பரியங்களைப் பேணிப் பாதுகாக்கும் முகமாக சைவ சமய நிறுவனங்கள் பல தோற்றம் பெற்றன. அவ்வாறு தோற்றம் பெற்ற சைவசமய நிறுவனங்களில் ஒன்றே சைவ வித்தியா விருத்திச் சங்கம்.

சைவ வித்தியா விருத்திச் சங்கம் 1923ம் ஆண்டு மார்கழி மாதம் ஒன்பதாம் திகதி யாழ்ப்பாணத்தில் ஆரம்பமானது. இதன் தலைவராக சேர்.பொன்.இராமநாதன், செயலாளராக சி.இராசரத்தினம் அவர்களும் விளங்கினர். சேர்.வைத்திலிங்கம் துரைசாமி , சு.இராசரத்தினம், சைவப் பெரியார் சிவபாதசுந்தரம் முதலானோர்களும் இதன் உறுப்பினர்களாக இருந்தனர்.

அன்று இச்சைவ வித்தியா விருத்திச் சங்கத்தைத் தோற்றுவித்தவரும் அதன் உறுப்பினராகவும் இருந்த சுப்பிரமணியம் இராசரத்தினம் அவர்கள் இதன் முகாமையாளராக பொறுப்பேற்றுக் கொண்டார். 1925 ஆம் ஆண்டு முதல் 1970 ஆம் ஆண்டு வரை இச்சங்கத்தின் உயிர் நாடியாக விளங்கி சங்கத்தின் செயற்பாடுகளுக்கு உத்வேகமளித்தார். ஆனால் இவரை அன்றிலிருந்து இன்று வரை "இந்து போர்ட் சு.இராசரத்தினம்" என அறியப்படலானார்.

இன்று இச்சங்கத்தில் தலைவர் திரு.V.T சிவலிங்கம், செயலாளர் திரு. தி.செல்வமனோகரன் அவர்களும் விளங்குகின்றனர் இவர்கள் உள்ளிட்ட 25 பணிப்பாளர் சபை உறுப்பினர்களும் இந்நிறுவனத்திற்கு தொண்டாற்றிக் கொண்டிருக்கின்றனர்.

இச்சபையில் இருப்பவர்கள் இல்லம், கல்வி, மருத்துவம், சமயம், பண்ணை, தொழிற் பயிற்சி எனும் ஆறு முக்கிய விடையங்களுக்கு உரிய திட்டப் பணிப்பாளர்களும் உள்ளடங்குவர். பொதுச்சபையே இப்பணிப்பாளர் சபையை நியமிக்கின்றது. இப்பணிப்பாளர் சபையில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களும் ஊதியம் பெறாது சேவை மனப்பான்மையோடு தொண்டாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

## அன்றைய நோக்கங்கள்

* முத்தமிழையும் வைசமயத்தையும் வளர்த்தல்.
* அநாதைச் சைவப் பிள்ளைகளைப் பராமரித்தல்.
* சைவாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.
* முன்னரே ஆரம்பித்து நடைமுறையில் உள்ள சைவ பாடசாலைகளுக்கு வேண்டிய எல்லா விதமான உதவி ஒத்தாசைகளையும் செய்து கொடுத்தல்.
* தனியாரால் ஆரம்பித்து நடத்துவதற்கு வசதி வாய்ப்பு அருகி கையளிக்கும் பாடசாலைகளை ஏற்று நடத்துதல்.
* இலங்கையில் எங்கெங்கு தேவையோ அங்கு எல்லாம் சைவப் பாடசாலைகளை அமைத்து பராமரித்தல்.

## இன்றைய நோக்கங்கள்

* முத்தமிழையும் சைவசமய பண்பாட்டினையும் பேணிப்பாதுகாத்தல்.
* யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வறிய அநாதைச் சைவப்பிள்ளைப் பராமரித்தல்.
* சங்கத்தினால் தோற்றுவிக்கப்பட்ட வறிய பாடசாலைகளுக்குத் தங்களால் இயன்றளவு செய்யக் கூடிய உதவிகளை வளங்குதல்.
* இல்லச் சிறார்களை நாளைய உலகிற்குத் தயாராக காட்டிக் கொடுத்தல்.
* மாணவர் மன்றம் இந்துமாமன்றங்களை நடாத்துவதன் ஊடாக மாணவர்களது ஆளுமைத் திறனை வெளிக்கொண்டு வருதல்.

## அன்றைய பணிகள்

187 பாடசாலைகளை இச்சங்கம் தனது முகாமையில் வைத்திருத்தல். யாழ்ப்பாணம்-156, கிளிநொச்சி-10, வவுனியா-05, முல்லைத்தீவு-07, மன்னார்-01, பதுளை-01, நாவலடி-03, கண்டி-02, புத்தளம்-02, என்றவாறு இச்சங்கம் பாடசாலைகளை அமைத்து நடாத்தியது இச்சங்கம் நிறுவிய முதலாவது பாடசாலையாக மாதகல் விக்னேஸ்வரா வித்தியாலயம் அமைகின்றது. எனினும் 1961 ஆம் ஆண்டு அரசாங்கம் இப்பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர். இச்சங்கம் பாடசாலைகளை அமைக்கும் பணிகளைக் கைவிட்டது.

சைவ ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கில் திருநெல்வேலியில் சைவாசிரிய கலாசாலை 1925 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதலாவது அதிபராக மயிலிட்டி சுவாமிநாதன் விளங்கினார். இதன் சிறந்த விரிவுரையாளர்களில் ஒருவராக பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை அவர்கள் விளங்கினார். இது 1963 ஆம் ஆண்டு அரசினரால் மூடப்படும் வரை 1500 ற்கு மேற்பட்ட சைவாசிரியர்கள் பயிற்சி பெற்று வெளியேறினர்.

சைவாசிரிய கலாசாலையில் பயிற்சி பெற்ற ஆசிரியர்களது தராதரத்தை மேலும் அதிகரிக்கும் வகையில் காவியப்பாடசாலை ஒன்று 1930 ஆம் ஆண்டு சைவாசிரிய கலாசாலையில் உருவாக்கப்பட்டது.

இச்சங்கத்தின் கீழ் இருந்து படித்துவிட்டு வேலையற்று இருக்கும் பெண்பிள்ளை களின் நலன் கருதி 31 தொழிற்பயிற்சி பாடசாலைகள் நிறுவப்பட்டன. அவற்றுள் 15 தையல் மற்றும் நெசவுப் பாடசாலைகளும், 16 பன்ன வேலைப்பாடசாலைகளும் காணப்பட்டன. இவற்றில் தொழிற்பயிற்சி பெற்றவர்கள் இலகுவில் வேலை வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டனர். 1928 ஆம் ஆண்டு அநாதரவற்ற சைவச்சிறார்களின் நலன் கருதி ஆண், பெண் பிள்ளைகளுக்காக தனித்தனி சிறுவர் இல்லங்களை திருநெல்வேலியில் அமைத்தல்.

## இன்றைய பணிகள்

இச்சங்கம் பல்வேறு பணிகளை சமூகத்தின் தேவைக்கேற்ப முன்னெடுத்து வருகிறது. அந்த வகையில் 2014 ஆம் ஆண்டு முதல் உரும்பிராய் கருணை இல்லம் எனப்படும் சைவப் பெண் பிள்ளைகளுக்கான அநாதை இல்லமும் இச்சங்கத்தினால் பொறுப்பேற்று நிர்வகிக்க ப்படுகிறது. தற்போது இதன் பெரும்பாலான பணிகள் ஆண்கள் இல்லம், பெண்கள் இல்லம், கருணை இல்லம் ஆகிய மூன்று சைவச்சிறுவர் இல்லங்களை பராமரிப்பதிலே தங்கியுள்ளது.

இல்லத்தில் வைத்து பெண் பிள்ளைகளுக்கான தையல், தொழிற் பயிற்சியை வழங்கி வருவதோடு ஆண் மாணவர்களுக்காக மரவேலை, மின் இனைப்பு, புத்தகம் கட்டும் பயிற்சி, விவசாய பண்ணை பயிற்சி போன்றவற்றையும் இருபாலாருக்குமான கணினிப் பயிற்சியையும் வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

இவை தவிர்ந்து மேலதிகமாக பிரெஞ்சு மொழி, கராத்தே, வாத்திய கருவிகளை இசைக்கப் பழக்குதல், செம்மணியில் நெற்பயிர்ச்செய்கை, காளாண் வளர்ப்பு, ஊறுகாய் வத்தல் போன்ற மேலதிக பயிற்சிகளையும் இச்சங்கம் தன் கீழ் இயங்கி வருகின்ற 03 இல்லங்களுக்கும் வழங்கி வருகிறது.

சிறார்களின் ஆற்றல்களை மேம்படுத்தும் முகமாக சங்கீதம், பண்ணிசை, வயலின், வீணை, மிருதங்கம், நடனம், நாடகம், யோகாசனம் ஆகிய வகுப்புக்கள் நடைபெறுகின்றன. இதன் மூலம் மாணவர் மன்றங்கள், இந்துமாமன்றங்கள், இல்ல நிகழ்வுகள், பாடசாலை பொது நிகழ்வுகளிலும் சிறார்கள் தமது கலை சார்ந்த ஆற்றல்களை வெளிப்படுத்தி வருகின்றனர். அத் தோடு வட இலங்கை சங்கீத சபை நடாத்தும் கவின்கலை சார்ந்த பரீட்சைகளிலும் தோற்றி சிறந்த பெறுபேறுகளைப் பெற்று வருகின்றனர்.

இச்சங்கத்தின் கீழ் இருந்து படித்து பல்கலைக்கழகங்கள், தேசிய கல்வியற் கல்லூரிகள், வெளிவாரிக்கற்கை நெறி என்பவற்றை மேற்கொள்ளும் மாணவர்களுக்கு சங்கம் அவர்களின் கல்வி நடவடிக்கைகளுக்கு என சிறு நிதியுதவியை மாதாந்தம் வழங்கி வருகிறது.

இச்சங்கத்தினால் மேற்கொள்ளப்படும் இன்றைய பணிகள் பின்வருமாறு உள்ளடங்கப்படுகின்றன.

* இல்லங்கள்
    * சைவச்சிறுவர் இல்லம் ( ஆண், பெண்)- திருநெல்வேலி
    * கருணை இல்லம் (பெண்)- உரும்பிராய்
* தொழிற்பயிற்சிகள்
    * இராசரத்தினம் தொழிற் பயிற்சி மையம்
    * மின்னினைப்பு
    * தச்சுவேலை
* தையல் தொழிற் பயிற்சி
    * கணினிப் பயிற்சி
    * சிறுகைத்தொழில் பயிற்சி மையம்
    * கை வேலை (அலங்காரம்)
    * விவசாய பயிற்சி நிலையம் போன்றவையும் இயங்கி வருகின்றன.

இவை மட்டுமன்றி அறநெறிப் பாடசாலையும் இயங்கி வருகிறது. இங்கு கற்கும் மாணவர்கள் மாகாணம், தேசிய மட்டங்களில் பரிசும் பாராட்டும் பெற்றுள்ளனர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அரச ஆதரவுடன் உருவாக்கப்பட்ட "நெனசல" (அறிவகம்) இல்லச் சூழலிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு கணினி பயிற்சி அளித்து வருகிறது.

இவ்வாறு பலதரப்பட்ட பணிகளைச் செய்த சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள் பல இன்று மட்டுப்படுத்தப்பட்டிருந்தாலும் அவை தொடர்ந்த வண்ணம் உள்ளன என்று குறிப்பிட்டால் அது மிகையாகாது.

**தி.ஹேமப்பிரியன்**
**தலைவர்**

## பொதுவான விளையாட்டுத் தகவல்கள்

01. உலகின் மிகப் பழமையான விளையாட்டு எது?
நீச்சல்

02. மனிதன் விளையாடிய முதல் விளையாட்டு ?
வில்வித்தை

03. டாக் ஸோபிலி என்றழைக்கப்படும் விளையாட்டு?
வில்வித்தை

04. "Tug of war" விளையாட்டு தோன்றிய நாடு ?
சீனா

05. ஜூடோ விளையாட்டு அறிமுகமான இடம் ?
ஜப்பான்

06. இடத்தையால் விளையாட்டுத் தடையுள்ள விளையாட்டு?
போபோ

07. போபோ விளையாட்டு முதலில் தொடங்கியது?
பாரசீகம்

08. Golf விளையாட்டின் பிறப்பிடம் ?
ஸ்கொட்லாந்து

09. டெனிஸ் விளையாட்டின் தாயகம்?
இங்கிலாந்து

10. செஸ் விளையாட்டின் தாயகம்?
இந்தியா

11. Lyla Ali பிரபலமான விளையாட்டு?
குத்துச் சண்டை

12. வொலிபோல் உருவானது?
1895

13. கராத்தே அதிகமாகப்பயிலும் நாடு?
ஜப்பான்

14. சதுரங்கத்தை கண்டறிந்தோர்?
இந்தியர்

15. புறா பந்தையத்தின் தாய் நாடு?
பெல்ஜியம்

**கு. தமிழிசை**
**தரம் – 09**

## என் தாய்

கருவறையிலே பத்துமாதம் சுமந்து
என்னைப் பெற்றெடுத்தவள் என்தாய்
பெற்றதும் என்னை முத்தமிட்டு
கண்ணீர் துளியில் மகிழ்ந்தவள் என் தாய்.

சிட்டுக்குருவி போல பறந்து திரிந்து சிறு
குறும்புகள் செய்த பொழுது அதனை கண்டு
மகிழ்ந்தவள் என் தாய்
பசுமையான நாட்டார் பாடல்களைப்பாடி
என்னை தூங்க வைத்து மகிழ்ந்தவளே என் தாய்.

நான் உண்ட உணவோடு பாசத்தையும்
ஊட்டி வளர்த்தவளே என்தாய்
பள்ளி செல்லும் பருவத்திலே-பல
பாடல்களையும் சொல்லிக் கொடுத்தவள் என்தாய்.

அம்மா என்றால் ஓடிவந்து
பாசம் காட்டியவளே என் தாய்
கண் கலங்கும் வேளையிற் கூட என்
கண்ணீரைத்துடைத்து ஆழத்தழுவியவளே என் தாய்

தாய் என்ற அன்பைக் கேட்காமலே
அள்ளிக் கொடுத்தவள் என்தாய்
மீண்டும் அவள் கருவறையிலே
நான் உதிப்பேனா?

யோ. மகிழினி
தரம் - 07

## அண்ணா

அன்னை இல்லாத எனக்கு
அன்னையாக நின்றீர்
தந்தை இல்லாத எனக்கு
தந்தையாக நின்றீர்
பாசமற்ற என் இதயத்தில்
பாச மழை பொழிந்தீர்
உம் கஷ்டம் மறந்தீர்
என் சந்தோசம் எண்ணியே
நீர் கல்லாது கஷ்டப்பட்டு
என்னைக் கல்வி மானாக்க எண்ணினீர்
உம்மை விதையாகவும் என்னை
மரமாக ஆக்கினீர்
உம்மைப்போன்ற ஒரு அண்ணன்
கிடைக்க என்னதவம் செய்தேனே.
எம் கடவுளுக்கு கோடான கோடி நன்றிகள்
எனக்கு ஓர் பாதை காட்டியதற்கு.

செ.நிகேதன்
தரம்- 10

## ஏற்றம் தந்தவனே

கலாசாலை வீதியிலே
சைவத்தையும் தமிழையும்
பேணிக்காத்து வரும்
சைவ வித்தியா விருத்திச் சங்கமே
சுனாமியிலே
தாயை இழந்து
தந்தையைப் பிரிந்து
கல்வியை மறந்து
ஒரு வேளை சோற்றுக்காக
தவியாய் தனித்து நின்ற வேளைதனில்
அன்புக்கரம் நீட்டி
ஆறுதல் தந்த
அகல் விளக்கே
உன்னால் இன்று
உயர் கல்வி கற்று
அந்நிய தேசத்தில் வாழ்ந்தாலும்
அன்று நீ தந்த அடைக்கலம்
இன்றும் எம் மனதில்
நேச நினைவுகளாய்
நிழல் போல் தொடர்வதை
இல்லக விளக்கே
நீ அறிவாயா?

க.செல்வமலர்
விடுதிக்காப்பாளர்

## நட்பு

நட்பு ஒரு தொழில்நுட்பம்
பிரிவு அதன் மறை நுட்பம்
நட்பின் சிகரம் நம் நட்பு
நட்புக்கே முகவரி

மூன்றெழுத்து வளைக்குள்
மூழ்கியது நட்பு
காண்போருக்கு
காலமெல்லாம் பிரியா நட்பு

எம்மிடம் உள்ள நட்பு
என்றும் பிரியமுடியாத இருப்பிடம்
இருப்பினும் அழியா
இதயமாய்த் தவழும்.

இ.கஜானி
க.பொ.த சாதாரணதரம்

## இந்துபோர்ட் சு. இராசரத்தினம் அவர்களின் 133ஆவது பிறந்தநாள் விழாவும் பரிசளிப்பு நிகழ்வும் - 2017






















ஆசிரியர் தினம்






விடுதிக்காப்பாளர் தினம்





## அண்ணன் முகம்

நான் உன்னைப் பார்த்ததில்லை
ஆனாலும் தினமும் பார்க்கிறேன்
நிலைக்கண்ணாடியில்
நீ என் ஜாடை என்று
சிலர் சொல்வதைக் கேட்டு.....

உன் ஜாடையை என்
கண்கள் பார்க்கும் போது,
நீ இருந்திருக்கக்கூடாதா?–என
எனக்குள் ஒரு கேள்வி.

உன் இறப்பு, உன் நினைவுகள்
உன் குடும்பத்தை–இன்று
என்ன நிலைக்கு கொண்டு சென்று விட்டது.
என நினைக்கும் போது
சுவர்களையே என் கண்கள்
நோக்குகின்றன அண்ணா.

"அண்ணா" என
மற்றவர்கள் தம் உறவை அழைக்கும் போது–என்னை
திரும்பிப் பார்க்க வைக்கின்றது.
அந்த உறவுச் சொல்–ஆனாலும்
தாங்கிக் கொள்கிறேன்.

செல்வி.ர.துஸ்யந்தினி
க.பொ.த உயர்தரம் 2018

## அப்பா

வலிகள் பல கடந்து உயிரை கையில் பிழிந்து
உயிருக்கு உயிர் கொடுத்தாய்
நீங்கள் பட்ட வேதனைக்கு
காணிக்கை இல்லை அப்பா
எங்களை நெஞ்சில் சுமந்ததில்
இருந்து இன்று வரை அப்பா
நீங்கள் அனுபவிபவை கொஞ்ச
துன்பமில்லை இத்தனை யையும் தாங்கி எமக்காய்
வாழ்கிறீர் உங்களை நலமாய் வைத்திருக்க
எத்தனை காலமாகுமோ.

தே. தேவதர்சிகா
தரம் – 08

## அப்பா

எம்மை பராட்டி, சீராட்டி
கண்ணை இமை காப்பது போல்
பேணி வளர்ந்த தந்தையே
பட்டினியில் ஒரு நாளும் வடாது
கஸ்டப்பட்டு எம்மைக் காத்தாய்
தப்புக்களைத் தட்டிக் கேட்டு
தண்டனைகள் நிறைய தனித்து
பாரினில் கல்விமானாக திகழ்வதற்கு
எமக்கு வழிகாட்டிய தந்ததையே
உங்கள் எண்ணங்களை
நிறைவேற்றுவதற்கு
என்றே ஒரு நாள் பட்டங்கள்–பல
பெற்று பாரினில் போற்றிட
வாழ்ந்திடுவேன்.

வி. சிஷாந்

## மனித வாழ்க்கை

இந்த வாழ்க்கை எதைத் தேடிப் போகிறது
வாழ்க்கை என்பது ஓட்டப் பந்தயமல்ல
யார் முன்னே யார் பின்னே என்பதற்கு
அது ஒரு தடையாதை பிறப்பிலிருந்து
இறப்பு வரை இதிலிருந்து
இன்பம் துன்பம் எதுவும் நிரந்தரமில்லை
இதைக் கடைசியில் புரிந்து
எந்தப் பயனுமில்லை
இருக்கும் வரை அனைவரையும்
மகிழ வைப்போம்
மனிதனை மனிதனாக மதிப்போம்.

தே. தேவதர்சிகா
தரம் – 08

# இலக்கை நோக்கி நகர...

வானத்தை போல
தடைகள் இல்லாமல்
சிந்திக்க வேண்டும்
காற்றிலே போகும்
மேகத்தைப் போல
விடுதலை வேண்டும்
மனிதா நீ கடந்து வந்த
பாதைகளைத் திரும்பிப்பார்
உன் உள்ளத்துக்குள் இருக்கும்
நம்பிக்கைக்குள் வாழ்வைத் தேடு

இழந்ததை எண்ணி எண்ணி
பட்டியல் போடாதே
இருப்பது இழக்காமல் இருக்க
திட்டம் போடு
எதிர் காலத்தில் பொற்காலம்
பூத்திட வேண்டுமானால்
துணிவு கொண்டு முயன்று
துன்பங்களை மற–பின்
வெற்றி இமயத்தைத் தொட
இலக்கை நோக்கி நகர்

இலக்கை நோக்கி நகர
இன்னும் பல வழிகளைத் தேடு
நம்பிக்கையாக நடந்து
துணிவை உன்னுள் அழைத்து விடு
வீரனுடன் போரிடுவதை விட்டு
கோழையுடன் போரிடாதே
வஞ்சனை பேசி வென்றவர்கள்
வாழ்வில் நிலைத்ததில்லை.

உன் பிறப்புக்கு அர்த்தம்
சேர்க்கும் வகையில்
உன் வரலாற்றை
இம் மண்ணிலே பதித்து விடு
தோல்வியைக் கண்டு துவளாமல்
நம்பிக்கையுடன் செயற்படு
முள் இல்லாத பாதையில்
சென்று விடாதே–அது
யாரோ ஒருவர் முன்னே தன்
புகழைப் பதித்த பாதை

முட்கள் நிறைந்த பாதையை
தகர்த் தெறிந்து செல்
உன் கால் தடங்களை
பதித்து விட்டுச் செல்
உன் இலட்சியப் பாதையை
உனக்கு பின் வருபவர்கள்
பின் தொடர்ந்து சென்று
வெற்றி அடையட்டும்
உனது இலக்கு இமயமாக இருந்தாலும்
இம் மளவும் அஞ்சாதே

துஷீவனா
க.பொ.த உயர்தரம் 2018

# நாங்கள் வாழும் இல்லம்

நல்ல நல்ல இல்லம் நாங்கள் வாழும் இல்லம்
சின்னஞ் சிறு சிறுவர் கூடி வாழும் இல்லம்
வண்ண வண்ண பூக்கள் மலரும் அழகான இல்லம்
கலை, கல்வி தந்து உயர்ச்சி காணச் செய்யும் இல்லம்.

ச.தர்சிகா
தரம் –2

## அம்மா

*முன்னூறு நாள் சுமந்தாள்*
*கண்ணீரால் போராடி*
*மரணத்தை வென்று*
*மகவாய் ஈன்றாள்*
*உதிரமதைப் பாலாய்*
*உண்ணக் கொடுத்தாள்*
*தன்நலம் மறந்தாள்*
*என் நலனுக்காய்*
*அறிவில் சிறந்திட*
*அறிவுரைகள் தந்தாள்*
*இன்பம் மறந்தாள்*
*என் இன்ப வாழ்வு*
*என் உணர்வுக்காய்*
*உற்ற துணைதந்தாள்*
*நிழலாய் தொடர்ந்த*
*என் இன்ப உறவு*
*என்னை விட்டு மறந்தாலும்*
*என் இதயம் உன்னை மறக்காது.*

## பலூன்

*வண்ண வண்ண பலூன்*
*வகை வகையான பலூன்*
*காற்றில் பறக்கும் பலூன்*
*கடையில் கிடைக்கும் பலூன்*

*சிறுவர் விரும்பும் பலூன்*
*சின்னச் சின்ன பலூன்*
*எங்கும் கிடைக்கும் பலூன்*
*எனக்கினிய பலூன்*

*அப்பா வாங்கிய பலூன்*
*ஆசையான பலூன்*
*சிவப்பு நிற பலூன்*
*சிங்கார பலூன்*

*ஊதி வெடிக்கும் பலூன்*
*ஊதா நிற பலூன்*
*பல வடிவம் உள்ள பலூன்*
*பல வகையான பலூன்*

தே.ரஜிலன்
தரம் – 09

## விடுதிக் காப்பாளார்

எமது இல்ல விடுதி காப்பாளர்கள்
மிகவும் அன்பானவர்கள்
மிகவும் அழகானவர்கள்
எம்மைத் தமது பிள்ளைகள் போல்
எண்ணி அன்பு காட்டுவார்கள்
சிறு பிழை செய்தால் அன்பு
மொழியால் தண்டிப்பார்கள்
எமக்கேதும் நோய் வந்தால்
எம்மைச் சீராகப் பராமரிப்பார்கள்
அவர்கள் காட்டும் அன்பால்
நாம் உள்ளம் மகிழ்த்தோம்
ஏனெனில் எமது தாய் போல்
அன்பைச் செலுத்துவார்கள்
அவர்கள் எமக்கு அன்பையும்
அரவணைப்பையும் தருகின்றார்கள்.

ஜெ.அருள்நிலா
தரம்:–9

## அப்பா

அப்பாவைப் போன்று ஒரு தெய்வமில்லை
சிலருக்கு அப்பா இருந்தும் பாசமில்லை
அப்பா உங்களுக்காக
கவிதை வழக்கும் போது
மிகவும் மனம் வலிக்கிறது
ஏன் தொரியுமா?
நீங்கள் என்னை விட்டு
நிறையத் தூரம் இருப்பதால்
எனக்கு எவ்வளவோ செய்வதற்கு
எமது உடம்பை வருத்தி வேலை செய்தீர்
அவ்வளவும் உங்களுக்கு
நான் செய்ய விதியில்லையே அப்பா
அப்பா எத்தனை ஜென்மம்
எடுத்தாலும் நீங்கள் தான்
எனது அப்பாவாக வரவேண்டும்

ந.தனுசியா
தரம்–9

# நான் ஒரு வைத்தியரானால்

நான் ஒரு வைத்தியரானால் மக்களுக்குப் பல சேவைகள் புரிவேன். ஏழை மக்களுக்கு இலவசமாக மருத்துவம் செய்வேன். மனிதர்கள் சுத்தமாக வாழ்வதற்குப் பல அறிவுரைகளை வழங்குவேன். மக்களுக்கு நோய்கள் ஏற்படாமல் இருப்பதற்குரிய ஆலோசனைகளை வழங்குவேன். நோயுற்று இருக்கும் வயோதிபர்களுக்கும் யாரும் அற்ற அனாதைகளைப் பராமரிப்பதற்கு அனாதை மடம் சிறுவர் இல்லங்கள் கட்டி அவர்களுக்கு இலவச மருந்து கொடுத்து அன்பாகவும் அவர்களைப் பராமரிப்பேன். நோயாளிகளோடு அன்பாபகப் பழகி நோய்களை கேட்டறிந்து சிகிச்சை அளிப்பேன்.

ப. பிரியதர்ஷன்
தரம் – 6

# எனக்குப் பிடித்த விளையாட்டு வீரன் (நெய்மர்)

கால்பந்து உலகில் இளம் நட்சத்திரம் நெய்மரை தோராயமாக 4192 கோடி ரூபா துல்லியமாக கூறினால் 222 மில்லியன் யூரோக்கள் செலவு செய்து பார்சிலோனா அணியிடமிருந்து வாங்கியுள்ளது. பிரான்சின் பாரிஸ் செயிட் ஜெர்மன் அணி (PSG) பிரேசில் பீலே ரொனால்டோ ரொனால் டினோ, ககா ராபெர்டோ கார் வோஸ் என்று பல ஜாம்பவான்களின் கால்பந்தின் பிறப்பிடம் ஆனால் கடந்த சில ஆண்டுகளாக உலக அரங்கில் சாதிக்கத் தவறி வருகிறது. இவ் அணி சேதனைகளுக்கு நடுவில் தன் தேசத்தை மீண்டும் வெற்றிப் பாதைக்கு கொண்டு வர சாம்பா தேசத்தில் பிறந்த ஆபத் பாந்தவன் தான் நெய்மர் இளம் வயதிலேயே உலகின் பார்வையைத் தன் பக்கம் திருப்பியவர் மெஸ்ஸி, ரொனால்டோ என்னும் இரண்டு அரசர்களுக்கும் பிறகு அடுத்து கால்பந்து உலகின் ஆளப் போகும் இளவரசன் வெறும் 17 வயதில் தொழில் முறை கால்பந்திற்குள் அடியெடுத்து வைத்த நெய்மர். இதுவரை சான் டோஸ் மற்றும் பார்சிலோனா ஆகிய கிளப்புளுக்காக 411 போட்டிகளின் விளையாடி 241 கோல்கள் அடித்துள்ளார். தற்போது வெறும் 25 வயதேயான நெய்மர் பிரேசில் அணிக்காக வெறும் 77 போட்டிகளில் 52 கோல்களை அடித்து அசத்தியுள்ளார்.

த.வாகீசன்
தரம் – 11

## தனிமை

தத்தளிக்குதே மனது
தாய் மடி இல்லாது தரைபுரளுதே
உள்ளம் அமைதியாய்
ஊமையானதே

தொட்டுத் தடவிட
தேற்றல் கூறி ஆற
சொந்தங்கள் இல்லை
சொல்லி அழ ஒருவருமில்லை

தனிமையிலும் நீண்டு
இனிமை காணும்
மானிடர் பல
மண்ணில் உளர்

மீளப் புத்துணர்வாய்
ஆழ்ந்த நினைவுகளை
சொல்லெனவே நொடிந்த பொழுதே
மீட்டிடுமாம் தனிமை

இ.கஜாயினி
தரம்:-10

## அம்மா

அம்மா அம்மா அழகே அம்மா
உயிரின் கசிவை உணர்ந்தாய்-அம்மா
உருவம் தந்தாய் உயிரைத்தந்தாய்
என்னை கண்ணுள் கண்ணாய் வைத்தாய்
தூசி பட்டால் மூச்சை விட்டாய்
நீதான் தெய்வம் நீதான் தெய்வம்
உன்னையன்றி ஏது தெய்வம்

சேலை தலைப்பில் சொர்க்கம் தந்தாய்
சோலைக்குள்ளே அமுதம் தந்தாய்
அள்ளி அணைத்து முத்தம் தந்தாய்
அழுதிடாமல் அன்னம் தந்தாய்

விரலின் நுனியைப் பற்றிப்பிடித்தாய்
விந்தை பலவும் சொல்லித் தந்தாய்
சிந்தை முழுதும் என்னை நிறைத்தாய்
சீவியமே நானாய்-ஆனாய்

வானம் கூட உன்னை போல் இல்லை
வள்ளல் யார்தான் உன்னைப் போல்
ஆறு பத்து ஆனபோதும் பிள்ளையென்று
காலம் முழுதும் காலில் கிடந்தேன்-என்
காலம் கழியும் வரம் தா தாயே
உலகப் பொய்யில் உண்மைப் பொருளே
உன்னை மறப்போர்க்கு உய்வே இல்லை.

ஜெ.ஜெகராஜினி
உ/த 2018

## அம்மா

எனது உயிர் அம்மாவே நீ என்னை தவிக்க விட்டு எங்கு சென்றாய்? நான் அழும்போது விழும் கண்ணீர் துளிகளே பெரிது அன்னையவள் உன்னை அன்று கருவினில் அடிவயிற்றில் சுமந்தாள். அழியா அன்பு கொண்டு இன்று அன்னையவள் முதுகிலே இன்நகையுடன் அமர்ந்து எதிர்காலம் நாளை எமதென்று ஏந்திய கொடியை நீட்டுகிறாள். இவள் தான் அன்னை அன்பும் அரவணைப்பிலும் பாதுகாத்தவள்  இவள் தான் அன்னை அன்னை என்ற சொல்லுக்கே ஒரு மகத்தான புனிதம் தோப்பில் கொடியில் ஜென்மம் மறுபடியும் பிறக்க வேண்டும். ஏன் என்றால் உன்னை ஒரு முறையாவது சுமப்பதற்கு. நான் அழும்போது நீ அழுவாய். நான் இப்போது பிரிகின்றேன் என்னுடன் வருவாயா.

அ.கனிஸ்ரா
தரம் - 9

# விடுகதைகள்

01. சகோதரர்கள் ஏழுபேர் மாறி, மாறி ஆட்சி செய்வார்கள் அவர்கள் யார்?

02. நெருப்பில் விழுந்தாலும் தண்ணீரில் மூழ்கினாலும் நிறம் மாறாது அது என்ன?

03. கல்லென்பர் கடித்துப் பார்த்தால் என்ன சுவை என்பர் அது என்ன?

04. ஒல்லிக்குச்சி உடம்புக்காரி சுத்தம் செய்வதில் கெட்டிக்காரி அவள் யார்?

05. வெள்ளிக் கதவு தங்க அறை அது என்ன?

06. பிரிக்க முடியாத பஞ்ச பாண்டவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு உயரம் அவர்கள் யார்?

07. ஒரு விளக்கு பன்னிரண்டு திரி அது என்ன?

08. வட்டமிட்டு கண்காணித்துத் திட்டமிட்டுத் திருடுவான் அவன் யார்?

09. சாப்பிட்டால் உருகிவிடும் அம்மாவும் அல்ல குழந்தைகள் குதூகலிக்கும் பெருமையும் அல்ல அது என்ன?

10. அனைவரையும் அடங்க வைப்பாள் ஆதவனுக்கே அடங்குவாள் அவள் யார்?

11. வளமாய் வளர்த்த மரம் வாசற்காலுக்கு உதவாத மரம் அது என்ன?

12. கடித்தால் கடிபடமாட்டாள் பிடித்தால் பிடிபடமாட்டாள் அவன் யார்?

13. வெள்ளைக் கத்தரிக்காய் கள்ளக் கூச்சல் போடுது அது என்ன?

14. அரிசி போலப் பூப் பூக்கும் அம்மாடி என்று காய்காய்க்கும் அது என்ன?

**விடைகள்**

1. கிழமைகள்
2. தங்கம்
3. கற்கண்டு
4. தும்புத்தடி
5. முட்டை
6. கை விரல்கள்
7. மாதங்கள்
8. பருந்து
9. ஐஸ்கிறீம்
10. பனி
11. வாழைமரம்
12. கிளி
13. சாம்பிராணி
14. மிளகாய்

ஜெ. ஜெயந்தன்
தரம் – 09

# நவராத்திரி தினம் - 2017









இந்து கலாசார அலுவல்கள் திணைக்களத்தால் எமது அறநெறிப் பாடசாலைச் சிறார்களுக்காக நடாத்தப்பட்ட
சர்வதேச யோகா தின நிகழ்வு - 2018









## சைவச்சிறுவர் அபிவிருத்தி நிலையத் தீபாவளித் திருநாள் - 2017















## சைவச்சிறுவர் அபிவிருத்தி நிலையச் சிறார்களின் கலை நிகழ்வுகளின் நிழல்கள்...

















## ரோசாப்பூக் கவிதை

நந்தவனத்தில் வாழும் ரோசாப்பூ
வண்ண வண்ண ரோசாப்பூ
எட்டடுக்கு இதழ் கொண்ட ரோசாப்பூ
சிகப்பு நிறமான ரோசாப்பூ

ராஜகுமாரியாம் ரோசாப்பூ
எங்களுக்கு எழில் தரும் ரோசாப்பூ
வடியும் தேனை சுவைத்து பருக
வண்டுகள் மொய்க்கும் ரோசாப்பூ
வானத்தில் இருந்து மழை பெய்யும் போது
அழகாக ஆடும் ரோசாப்பூ
மக்களை மகிழ்சி ஊட்டும் ரோசாப்பூ
நல்ல குணமுள்ள ரோசாப்பூ
ஆனால் உதிர்ந்து விட்டால்
அழகை இழக்கும் ரோசாப்பூ
மறுபடியும் எப்போது நந்தவனத்தில்
பூத்து எப்போது அழகு காட்சி தருவாய்.

அ.கனிஸ்ரா
தரம்:-9

## நல்லவனாக நீ வாழ்க

ஆசைப்பட்ட மனிதனுக்கு
ஏழு எட்டு வீடடா!
தேகம் விட்டுப் போன பின்னே
ஏக வெளி தானடா
மோகம் கொண்ட மனிதனுக்கு
ஏழு எட்டுப் போன பின்னே
ஏது மிங்கே வீணடா!

பாதம் தொட்டும் வேண்டிக் கொள்ளும்
பகல் வேடக்காரனை
வேதம் ஓதும் சாத்தான் என்று
வேறு படுத்தி வையடா
காலம் தோறும் தொண்டு செய்து
கனிவாய் மனதைக்காத்திடு
ஞாலம் உன்னைப் போற்ற வேண்டும
நல்லவனாய் நீ வாழ்ந்திடு!

பு.விஜயதர்ஷினி
தரம் - 08

## சிறுவர் உலகம்

சத்தம் இன்றியே
நித்தம் பணி செய்
சாதனை உருவாகும்-பின்
சரித்திரம் உனதாகும்

வெட்டிப் பேச்சு
ஊர் வம்பெதுவும்
வேதனை உருவாக்கும் -பின்
சோதனை பெரிதாகும்

திட்டம் போட்டே
திறமுடன் செய்தால்
காரியம் எளிதாகும்-பின்
கனவுகள் நனவாகும்

பு.விஜயதர்ஷினி
தரம்-08

## ஒற்றுமை

பகைமையே வாழ்வின் கடைக்கண்
இதைப் பிடுங்கியே எறிவாய் மனிதா
அன்பே ஒற்றுமையின் அடித்தளம்
அதை மனிதனில் விதைப்பாய் மனிதா

ஆணவம் என்பது பேய் - அதை
அடியோடு ஒழித்திடு மனிதா
அன்புடன் வாழ்வு மலர்ந்திட நீ
அயராது உழைத்திடு மனிதா

உ.டர்சனா
தரம் - 10

## சிந்தனைத் துளிகள்

அச்சத்தைப் போக்கு
அன்பினைத் தேக்கு!

அறத்தினைப் பெருக்க
அறிவினை விரிவு செய்!

நாட்டினை நேசம் செய்
வீட்டினில் தூய்மை செய் !

ஒற்றுமை உயர்வாம்
வேற்றுமை விலக்கிடு!

நற்றமிழ் போற்றிடு
பெற்றோரைப் பணிந்திடு!

கல்வியில் தேர்ந்திடு
கற்றது கடைப்பிடி!

ஆசிரியர் அடி தொழ
அன்பினால் கூடி வாழ்!

நட்பின் நலம் தேடு
மானும்போற்று!

கொட்டுகின்ற கண்ணீர்
சுடுவதுதான் இயற்கை!

சுடுகின்ற சொல்லே
ஆறாத புண்ணாகும்!

வெட்டுகின்ற காயம் ஆறலாகும்
கட்டுகின்ற பூனைந்துரை விழலாகும்!

தன்னம்பிக்கை, ஆர்வம், முயற்சி இவற்றை
எந்தச் சூழ்நிலையிலும் கைவிடக்கூடாது!

*பு.விஜயதர்ஷினி*
*தரம்:-08*

## என் தாய்

01. கருவறையிலே பந்து மாதம் சுமந்து என்னைப் பெற்றெடுத்தவள் தாய் பெற்றதும் என்னை முத்த மிட்டு கண்ணீர் துளியில் மகிழ்ந்தவள் என் தாய்.

02. சிட்டுக் குருவி போல பறந்து திரிந்து சிறு குறும்புகள் செய்த பொழுது அதனை கண்டு மகிழ்ந் தவள் என் தாய் பசுமையான நாட்டார் பாடல்களைப்பாடி என்னை தூங்க வைத்து மகிழ்ந்தவளே என் தாய்.

03. நான் உண்ட உணவோடு பாசத்தையும் ஊட்டி வளர்த்தவளே என் தாய் பள்ளி செல்லும் பருவ த்திலே-பல பாடல்களையும் சொல்லிக்கொடுத்தவள் என் தாய்

04. அம்மா என்றால் ஓடி வந்து பாசம் காட்டியவளே என் தாய் கன் கலங்கும் வேளையிற் கூட என் கண்ணீரைத் துடைத்து ஆரத்தழுவியவளே என் தாய்.

05. தாய் என்ற அன்பை கேட்காமலே அள்ளிக் கொடுத்தவள் என் தாய் மீண்டும் அவள் உதிப்பேனே.

ரலக்சன்
தரம் –9

## மனித நேயம்

மனிதா நீ உன்
மனிதாபி மானத்தை
எங்கே தொலைத்தாய்

மனித நேயத்தை மறந்து விட்டு
மிருகத்தனமான செயலில் ஈடுபடும்
உன் மனித நேயம் எங்கே போயிற்று

உன் தாய் நாட்டிற்கு
நல்லன செய்யும்
நற் பிரஜையாய்
வாழ வேண்டிய நீ
அழிவைத் தேடித்தரும்
ஈனச் செயல்களை
செய்வது முறைதானா?

வேண்டாம் மனிதா
விட்டு விடு
இந்த மனித நேயம்
அற்ற செயல்களை

நாட்டிற்கும் வீட்டிற்கும்
நல்லவை செய்யும்
மனிதாபி மானமுள்ள
மனிதனாய் இன்றே
மாறி விடு !

"இலட்சியம் மட்டும் உயர்வாக
இருந்தால் போதாது
அதனை அடையும் வழியும்
உயர்வாக இருக்க வேண்டும்"

சி.வனுஜா
தரம் – 10

## கடவுளிடம் நண்பராகுங்கள்

பாலர் வகுப்பின் முதல் நாளில் அறிமுகப்படுத்தப்பட்ட பாடங்களில் ஒன்று தான் கடவுள். ஆம், பயத்தைக் கொண்ட பக்தியாய் திணிக்கப்பட்டவன். அவன் வார்த்தைகளில் அறிமுகமாகி பின் அச்சுக்குள் ஊற்றப்பட்டானாம் வடிவமைப் பாளன் திறமை அபாரம்! அசாத்திய உருவங்களை அசட்டாக நம்ப வைத்தான். ஆம் அங்கும் பயத்தின் உதவி உருவம் கொடுத்தாகி விட்டனர். அடுத்து கடவுளின் சக்திகள் ஐயோ! கொட்டிக் கொண்டே செல்கின்றனரே. குறைகள் எனத்தெரிந் தும் கூட கேட்க முடியவில்லை. இதற்காகத் தான் ஆரம்பத்திலேயே என்னில் பயம் விதைக்கப்பட்டதோ என்னவோ இதுபோக நாட்களில் இரண்டு தடவை தவறாமல் தலை வணங்க வேண்டுமாம். அடிமைக ளும் கூட இப்படித்தானே கடவுளை எஜமா னாய் அறிமுகப்படுத்தாதீர்கள் நண்ப னாக்கி விடுங்கள். நாங்கள் பார்த்துக் கொள்கிறோம்.

துரைசிங்கம் சாளினி
தரம் – 11

## விடுகதைகள்

01.ஊதியம் வாங்காமலே உழுவான் அவன் யார்?

02.உடல் இல்லை ஆனால் ஊரெல்லாம் திரிபவன் அவன் யார்?

03. பகலில் கூட வருவான் இரவில் வரமாட்டான் அவன் யார்?

04. சுற்றி விட்டால் சுழன்று, சுழன்று ஆடுவான் அவன் யார்?

05. முட்டி நிறைய முத்துக்கள் அது என்ன?

06.ஓயாமல் ஓடித்திரிவாள் ஒன்றும் வேலை இல்லை அவன் யார்?

07.சின்னப்பையன் ஓடி, ஓடி வேலி அடைக்கிறான் அவன் யார்?

08.ஒற்றைக் காலில் நின்று ஓடையில் மீன் பிடிப்பவன் அவன் யார்?

09.சுடும் நெருப்புப் பந்து எட்டிப் பிடிக்க முடியாத பந்து அது என்ன?

10.தீக்குளித்துச் சாகிறவன் காற்று குளித்தும் சாவான் அவன் யார்?

11.சுண்டி விட்டால் இரத்தம் வராது ஆனால் வெற்றி தோல்வி வரும் அதுஎது?

12.நிற்காமல் ஓடுபவனைத் துரத்திப் பிடிக்க ஆளில்லை அவன் யார்?

## விடைகள்

1. மண்புழு
2. புகை
3. நிழல்
4. பம்பரம்
5. மாதுளம்பழம்
6. நாய்
7. தையல் ஊசி
8. கொக்கு
9. சூரியன்
10. கற்பூரம்
11. பென்சில்
12. பூமி

ஜெ. சஜீந்தன்

தரம் : 05

## பொது

01. மின்னேரியாக் குளத்தை கட்டிய மன்னன் யார்?

மகாசேனன்

02. கலா வாவியைக் கட்டிய மன்னன் யார்?

தாதுசேனன்

03. இலங்கையிலுள்ள மிகப்பெரிய குளம் எது?

சேனநாயக்க சமுத்திரம்

04. கண்டி தலதாமாளிகையை அமைத்த மன்னன் யார்?

விமலதர்ம சூரியன்

05. சிகிரியாவை கட்டுவித்த மன்னன் யார்?

காசியப்பன்

06. இலங்கையின் பண்டைய வரலாறு பற்றி அறிய உதவும் நூல் எது?

மகாவம்சம்

07. இயற்கைத் துறைமுகம் அமைந்துள்ள இடம்?

திருகோணமலை

08. இலங்கையின் மிக நீளமான நதி எது?

மகாவலி கங்கை

09. உலகிலேயே மிக நீளமான நதி எது?

நைல் நதி

10. உலகில் மிக நீளமான நீர்வீழ்ச்சி யாது?

ஏஞ்சல் நீர்வீழ்ச்சி

கு.சஞ்சீவன்

தரம் – 09

## சைவ வித்தியா விருத்திச் சங்கத்தின் பணிகள்:

1. சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் (இல்லங்கள்)
    - சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையம் (ஆண்) - திருநெல்வேலி
    - சைவச் சிறுவர் அபிவிருத்தி நிலையம் (பெண்) - திருநெல்வேலி
    - கருணை இல்ல சிறுவர் அபிவிருத்தி நிலையம் (பெண்) - உரும்பிராய்

2. தொழிற்பயிற்சிகள்
    - இராசரத்தினம் தொழிற்பயிற்சி மையம்
        * மின்னிணைப்பு
        * தச்சுவேலை
    - தையற் பயிற்சி நிலையம்
    - கணினி பயிற்சி நிலையம்
    - சிறு கைத்தொழில் மையம்
    - கைவேலை (அலங்காரம்)
    - விவசாயப் பயிற்சி நிலையம்

3. அறிவகம் (Nenasala)

4. அறநெறிப்பாடசாலை


**The Hindu Board of Education**
Kalasalai Road, Thirunelvely,
Jaffna


Guru Printers, Thirunelvely, 021 222 8266